**அல்லாஹ்வின் கட்டளை**

يَاَيُّهَا الرَّسُوْلُ بَلِّغْ مَآ اُنْزِلَ اِلَيْكَ مِنْ رَّبِّكَ ۭ وَاِنْ لَّمْ تَفْعَلْ فَمَا بَلَّغْتَ رِسَالَتَهٗ ۭ وَاللّٰهُ يَعْصِمُكَ مِنَ النَّاسِ ۭ اِنَّ اللّٰهَ لَا يَهْدِي الْقَوْمَ الْكٰفِرِيْنَ

தூதரே! உம்முடைய இறைவனிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எட்ட வைப்பீராக. நீர் (அவ்வாறு) செய்யவில்லையாயின், நீர் அவனுடைய தூதை (அறவே) எட்ட வைக்கவில்லை. மேலும் அல்லாஹ் உம்மை மனிதர்களிடமிருந்து காப்பாற்றுவான். நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போருக்கு ஒருபோதும் நேர்வழி காட்ட மாட்டான். (5:68)


بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 31

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

25 துல் ஹஜ்ஜா 1442 ஹிஜ்ரி கமரி 05 ஸஹூர் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 05 ஆகஸ்ட் 2021


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**என்னை இறைவனே தன் புறமிருந்து அனுப்பியுள்ளான் என்று நான் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறியுள்ளேன். ஆனால் அல்லாஹ்வின் மீதான மகத்துவம் அவர்களின் உள்ளத்தில் சிறிதளவு இருந்திருந்தாலும் அவர்கள் (என்னை) நிராகரித்திருக்க மாட்டார்கள். மேலும் நாம் அல்லாஹ்வின் பெயரை உதாசீனப்படுத்திவிடக்கூடாது என்று அதைக்கண்டு அஞ்சி இருப்பார்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### நற்செயல்களின் அடையாளம்

தங்களிடம் எந்த விஷயம் இஸ்லாத்திற்கு எதிராக உள்ளது என்பதை இந்த மக்கள் புரிவதில்லை. நாங்கள் لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று கூறுகின்றோம். தொழவும் செய்கின்றோம். நோன்புகளின் நாட்களில் நோன்பும் நோற்கின்றோம். ஸக்காத்தும் கொடுக்கின்றோம். ஆனால் நான் கூறுகின்றேன். இந்த அனைத்து செயல்களும் நற்செயல்கள் என்ற வடிவில் இருப்பதில்லை. மாறாக, வெறும் (பழத்) தோலை போன்றதாகும். அதில் சாறு (இருப்பது) இல்லை. அவ்வாறில்லையென்றால் அவர்களின் இந்த செயல்கள் நற்செயல்களாக இருக்குமென்றால் பின்னர் அவர்களின் இந்த செயல்களில் தூய விளைவுகள் ஏன் உருவாகவில்லை? எல்லா குழப்பங்களிலிருந்தும் கலப்படத்திலிருந்தும் செயல்கள் தூய்மையாக இருக்கும்போதுதான் அவை நற்செயல்களாக இருக்க முடியும். ஆனால் அவர்களிடம் இந்த விஷயங்கள் எங்கே இருக்கின்றன? ஒரு நம்பிக்கையாளர் இறையச்சமுடையவராக இருந்து மேலும் நற்செயல் செய்பவராகவும் இருக்கும்போது அவர் உண்மையாளர்களின் எதிரியாக இருப்பார் என்பதை என்னால் ஒருபோதும் நம்ப முடியாது. இந்த மக்கள் நம்மை கட்டுப்பாடற்றவர்கள் என்றும், நாத்தீகர்கள் என்றும் கூறுகின்றனர். மேலும் இறைவனுக்கு அஞ்சுவதில்லை.

என்னை இறைவனே தன் புறமிருந்து அனுப்பியுள்ளான் என்று நான் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறியுள்ளேன். ஆனால் அல்லாஹ்வின் மீதான மகத்துவம் அவர்களின் உள்ளத்தில் சிறிதளவு இருந்திருந்தாலும் அவர்கள் (என்னை) நிராகரித்திருக்க மாட்டார்கள். மேலும் நாம் அல்லாஹ்வின் பெயரை உதாசீனப்படுத்திவிடக்கூடாது என்று அதைக்கண்டு அஞ்சி இருப்பார்கள். அவர்களுக்கு உண்மையான மற்றும் உயர்தரமான ஈமான் அல்லாஹ்வின்மீது இருக்கும்போதும் மறுமை நாளின் தண்டனைக்கு அஞ்சும்போதும்தான் இந்த நிலை உருவாக முடியும். மேலும் لَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهٖ عِلْمٌ என்பதன் அடிப்படையில் அவர்களின் செயல்கள் இருந்திருக்க வேண்டும்.

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

**பிள்ளைகள் மீதான பாசமே ஏராளமான பாவங்களுக்கு காரணியாக உள்ளது. பிள்ளைகளை சீர்கெடுக்கின்ற நேசம் என்பது நேசமல்ல. (அது) பகைமை ஆகும். பிள்ளைகளின் மீதான நேசம் என்பது அவர்களை சீர்கெடுப்பதற்கு காரணியாக அமைந்து விடக்கூடாது என்ற பாடத்தை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். பிள்ளைகள் மீதான அன்பை விட இறைவன் மீதான அன்பில் நாம் மேலோங்கி இருக்க வேண்டும். இது இறைவனுடைய திருப்திக்கான காரணியாக மட்டும் இருப்பதில்லை. மாறாக, தனது பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு வழிமுறையாக அமைகின்றது**

رَبِّ اِنَّهُنَّ اَضْلَلْنَ كَثِيْرًا مِّنَ النَّاسِ ۚ فَمَنْ تَبِعَنِيْ فَاِنَّهٗ مِنِّيْ ۚ وَمَنْ عَصَانِيْ فَاِنَّكَ غَفُوْرٌ رَّحِيْمٌ (இப்ராஹீம்: 37)

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கம் வழங்கியுள்ளார்கள்:

(இது) இறை நேசத்திற்கான எப்படிப்பட்ட தூய வெளிப்பாடாகும்! ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். எனது சந்ததிகள் ஷிர்க் செய்யவில்லை என்றால் தான் அவர்கள் எனது பிள்ளைகள் ஆவார்கள். இல்லையென்றால் இல்லை. இந்த வசனத்திலிருந்து நமக்கு இதுவும் தெரிய வருகின்றது. அதாவது பிள்ளைகள் மீதான பாசமே ஏராளமான பாவங்களுக்கு காரணியாக உள்ளது. பிள்ளைகளை சீர்கெடுக்கின்ற நேசம் என்பது நேசமல்ல. பகைமை ஆகும். பிள்ளைகளின் மீதான நேசம் என்பது அவர்களை சீர்கெடுப்பதற்கு காரணியாக அமைந்து விடக்கூடாது என்ற பாடத்தை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். பிள்ளைகள் மீதான அன்பை விட இறைவன் மீதான அன்பில் நாம் மேலோங்கி இருக்க வேண்டும். இது இறைவனுடைய திருப்திக்கான காரணியாக மட்டும் இருப்பதில்லை. மாறாக, தனது பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு வழிமுறையாக அமைகின்றது.

பௌதீக ஒவ்வில் ஆன்மீக மற்றும் நல்லொழுக்க சீர்திருத்தத்திற்கான எண்ணம் முதன்மையாக இருக்க வேண்டும். பிள்ளைகள் முயற்சிக்குப் பிறகும் சரியாகவில்லை என்றால் ஒரு நேரம் இவ்வாறு வரும். அப்போது அவர்களுடன் தொடர்பை துண்டித்துக் கொள்வது அவசியமானதாக ஆகிவிடும். ஏனென்றால் தாய், தந்தையர் நமது தவறுகளை கண்டு கொள்ள மாட்டார்கள் என்று அவர்களுக்கு தெரியும்போது அவர்கள் தவறான வழியில் சென்று விடுகின்றார்கள். ஆனால் நமது தவறுகளின் போது உரிய முறையில் பிடிக்கப்படுவோம்

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப யூதர்கள் மற்றும் கிருஸ்துவர்களை யமன் நாட்டிலிருந்து வெளியேற்றியபோது அவர்களின் நிலங்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கைப்பற்றவில்லை. மாறாக அவர்களின் நிலங்களை விலைக்கு வாங்கினார்கள்**

**ரிதாபம்! பரிதாபம். இதன் நல்ல பகுதியை நான் சாப்பிட்டு விட்டு அதன் மோசமான பகுதியை மக்களுக்கு கொடுத்தால் நான் எவ்வளவு மோசமான ஆட்சியாளனாக இருப்பேன். இந்தப் பாத்திரத்தை எடுத்துச் செல்லுங்கள். இதைத்தவிர்த்து வேறு எதையாவது உண்பதற்கு எமக்கு கொண்டு வாருங்கள்**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் மஸ்ஜிது நபவி விரிவாக்கம் நடைபெற்றது. மக்கள் தொகை கணக்கெடுப்பு துவங்கப்பட்டது. பொது மக்களுக்கு ரேஷனிங் சிஸ்டம் துவங்கப்பட்டது. ஷூரா அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. விவசாயத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது**

**வறட்சி நாட்களில் இதற்கு முன்பு செய்திராத ஒரு பணியை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் செய்தார்கள். அது என்னவென்றால், அன்னார் மக்களுக்கு இஷா தொழுகையை நடத்தி விட்டு தனது வீட்டினுள் சென்று விடுவார்கள். இரவின் கடைசிப் பகுதி வரை தொடர்ந்து தொழுது கொண்டிருந்தார்கள். பின்னர் அன்னார் வெளியேறுவார்கள். மதீனாவின் பகுதிகளை சுற்றி வருவார்கள்**

**மஸ்ஜிது நபவியில் முதல் முறையாக விரிப்பு விரித்த முதல் நபர் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஆவார்கள்**

**இஸ்லாம் தான் நாட்டின் உரிமைகளையும் நிலைநாட்டியுள்ளது என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். இஸ்லாத்தின் பார்வையில் ஒவ்வொரு நபரின் உணவும், இருப்பிடமும், உடையின் பொறுப்பும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இஸ்லாம் மட்டுமே முதன் முதலில் இந்த விதிமுறையை நடைமுறைப்படுத்தி உள்ளது**

**அதிகாரியாக நியமிக்கப்பட்டு வந்தவரிடமிருந்து நான் துருக்கி குதிரையில் சவாரி செய்ய மாட்டேன் என்ற உறுதிமொழி பெறப்பட்டு வந்தது. மென்மையான ஆடைகளை உடுத்தக்கூடாது. அரைத்த கோதுமையை உண்ணக்கூடாது. வீட்டு வாசலில் காவலாளிகளை நிறுத்தக்கூடாது. ஏழைகளுக்காக எப்போதும் கதவை திறந்தே வைத்திருக்க வேண்டும்**

**www.ahmadipedia.org புதிய வெப்சைட் துவங்கி வைத்து அறிவிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 02 ஜுலை 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **02 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

இன்றைய நாட்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. அது தொடர்பாகவே இன்றும் நான் எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப யூதர்கள் மற்றும் கிருஸ்துவர்களை யமன் நாட்டிலிருந்து வெளியேற்றியபோது அவர்களின் நிலங்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கைப்பற்றவில்லை. மாறாக அவர்களின் நிலங்களை விலைக்கு வாங்கினார்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: கிருஸ்துவர்கள் மற்றும் யூதர்களிடம் இருந்த யமன் நாட்டு நிலம் ஹராஜி நிலமாக (புறம்போக்கு நிலமாக) இருந்தது. ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நிலத்தை யூதர்கள் மற்றும் கிருஸ்துவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். மேலும் அவர்களை அரபு தீவுகளிலிருந்து வெளியேற்றியபோது அந்த நிலம் ஹராஜி நிலமாக இருந்தபோதிலும் சட்டப்படி அரசாங்கமே அதன் உரிமையாளராக கருதப்பட்ட போதிலும் அன்னார் அந்த நிலத்தை அவர்களிடமிருந்து கைப்பற்றிக் கொள்ளவில்லை. மாறாக, விலைக்கு வாங்கினார்கள்.

ஃபத்ஹுல் பாரி ஷரஹ் புகாரியில் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

عَنْ يَحْيَى بْنِ سَعِيْدٍ أَنَّ عُمَرَ أَجْلَى أَهْلَ نَجْرَانَ وَالْيَهُوْدَ

وَالنَّصَارٰى وَاشْتَرٰى بَيَاضَ أَرْضِهِمْ وَكُرُوْمَهُمْ

அதாவது யஹ்யா பின் ஸயீத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நஜ்ரான் நாட்டின் இணை வைப்பவர்கள், யூதர்கள் மற்றும் கிருஸ்துவர்களை அங்கிருந்து நாடு கடத்தினார்கள். மேலும் அவர்களின் நிலங்களையும், தோட்டங்களையும் விலைக்கு வாங்கினார்கள். யூதர்களின் நிலம் உஷ்ரி (பட்டா) நிலமாக இருந்திருக்க முடியாது என்பது வெளிப்படையாகும். அது உஷ்ரி நிலமாக இருந்திருந்தால் ஒரு முஸ்லிம் அதற்கு உரிமையாளராக இருந்திருப்பார். அந்நிலையில் யூதர்களிடமிருந்து அதை விலைக்கு வாங்கும் கேள்வியே இருந்திருக்காது. அது நிச்சயமாக ஹராஜி நிலமாக இருந்தது.

இந்திய நிலம் ஹராஜி நிலமாக அறிவிக்கப்படுவது போன்று அது நிச்சயமாக ஹராஜி நிலமாகவே இருந்தது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை ஹராஜியாக அறிவித்து அதனுடைய உரிமையாளராக அரசாங்கத்தை அறிவித்து அதனை கையகப்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக அதனை விலைக்கு வாங்கினார்கள்.

இது ஹராஜி நிலமும் அல்ல. முஷ்ரி நிலமும் அல்ல. மாறாக, இது வேறொரு வகையான நிலமாகும் என்று சிலர் கூறினால் அது அவர்களின் அறிவீனமான எண்ணமாகும். மேலும் இஸ்லாமிய ஷரீஅத்தை அறியாததன் அடையாளமாக இருக்கும். உஷ்ரி மற்றும் ஹராஜி வகையான நிலங்களைத் தவிர்த்து வேறு எந்த வகை நிலமும் இஸ்லாத்தில் இல்லை. எனினும் தரிசாக கிடக்கின்ற மற்றும் அதற்கு எந்தவொரு உரிமையாளரும் இல்லாத நிலங்களைத் தவிர்த்து வேறு வகை இல்லை. எனவே நிச்சயமாக யூதர்கள், நஸ்ரானிகள் மற்றும் நஜ்ரானைச் சேர்ந்த இணை வைப்பவர்களின் நிலம் ஒன்று ஹராஜி ஆக இருந்தது. அல்லது உஷ்ரி ஆக இருந்திருக்கும். ஆனால் இந்த இரண்டு நிலையிலும் அதற்கு உரிமையாளரான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நிலத்தை கட்டுப்பாட்டில் வைத்து இருந்தவர்களிடமிருந்து விலைக்கு வாங்கினார்கள்.

(இஸ்லாம் அவ்ர் முலிகிய்யத் ஸமீன், ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 444, 478,479)

இஸ்லாத்தில் போர்க் கைதிகளைத் தவிர்த்து மற்றவர்களை அடிமையாக்குவதற்கான தடை பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

تُرِيْدُوْنَ عَرَضَ الدُّنْيَا என்று அல்லாஹ் கூறுகின்றான். முஸ்லிம்களே! நீங்கள் அந்நிய சமுதாயங்களைப் போன்று இதை விரும்புகின்றீர்களா? அதாவது நீங்கள் அந்நிய சமுதாயங்களை சிறைபிடித்து உங்களது வலிமையை அதிகரித்துக் கொள்வதை விரும்புகிறீர்களா?

وَاللّٰهُ يُرِيْدُ الْاٰخِرَةَ நீங்கள் உலகத்திற்கு பின்னால் செல்வதை அல்லாஹ் விரும்பவில்லை. மாறாக, உங்களை அவனது கட்டளைகளின் கீழ் வழிநடத்த (அவன்) விரும்புகின்றான். அவை முடிவின் அடிப்படையில் சிறந்ததாகும். மேலும் மறு உலகிலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு தகுதியுடையதாக உங்களை ஆக்கி விடும். அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கும், முடிவின் அடிப்படையில் மகிழ்ச்சிகரமாக அமைவதன் அடிப்படையிலும் இந்தக் கட்டளையே உங்களுக்கு சிறந்ததாகும். நீங்கள் போரின்போது கைது செய்யப்பட்ட போர்க் கைதிகளைத் தவிர வேறு எவரையும் சிறைபிடிக்காதீர்கள். ஆக போர்க் கைதிகளைத் தவிர்த்து வேறு எந்த கைதிகளுக்கும் இஸ்லாத்தில் ஆகுமானதில்லை.

இந்தக் கட்டளையின்படி இஸ்லாத்தின் ஆரம்பம் முதல் மிகக் கடுமையாக அமல் செய்யப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஒரு முறை யமன் நாட்டு மக்களின் குழு ஒன்று அன்னாரிடம் வந்தது. மேலும் இஸ்லாத்திற்கு முன்பாக எங்களை கிருஸ்துவர்கள் எவ்வித போருமின்றி வலிமையினால் எங்களை அடிமையாக்கிக் கொண்டார்கள். நாங்கள் சுதந்திரமான கோத்திரமாக இருந்தோம். எங்களை இந்த அடிமைத்துவத்திலிருந்து விடுதலை ஆக்க வேண்டும் என்று முறையிட்டனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இது இஸ்லாத்திற்கு முன்பு நடைபெற்ற சம்பவமாக இருப்பினும் நான் இது குறித்து விசாரணை நடத்துவேன். உங்களது கூற்று உண்மை என்று நிரூபணமானால் நான் உங்களை உடனடியாக விடுதலை செய்து விடுவேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இங்கு ஓர் ஒப்பீடு செய்கின்றார்கள். இன்றைய ஐரோப்பாவின் நிலையை பாருங்கள். இது இஸ்லாத்தின் போதனையாக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை செயல்படுத்தினார்கள். அல்லது அது குறித்து அவர்களுக்கு மன நிறைவை வழங்கினார்கள். ஆனால் இதற்கு நேர் மாற்றமாக ஐரோப்பாவில் என்ன நடக்கின்றது? ஐரோப்பியர்கள் தனது வியாபாரங்கள் மற்றும் விவசாயத்தை வளர்ப்பதற்காக 19வது நூற்றாண்டின் தொடக்கம் வரை அடிமைத்துவத்தை நடைமுறைப்படுத்தி வந்தார்கள். இஸ்லாத்தின் வரலாற்றிலிருந்து இஸ்லாத்தை சாராத ஓர் அடிமைத்தனம் பற்றியும் தெரிய வருகின்றது. இதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆயினும் அடிமைகளின் மூலமாக நாட்டின் வியாபாரம் அல்லது தொழில் முன்னேற்றத்தைப் பற்றி எங்கும் குறிப்பு கிடைப்பதில்லை.

(இஸ்லாம் கா இக்திஸாதி நிஸாம், அன்வாருல் உலூம், தொகுதி 18 பக்கம் 26,27)

ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் மிகக் கடுமையான வறட்சி ஏற்பட்டு விட்டது. மதீனா மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டது. கடுமையான காற்று வீசும்போது சாம்பலைப் போன்று மண் பறந்து சென்றது. இதன் காரணமாக அந்த வருடத்தின் பெயர் ஆமுர் ரமாதா (சாம்பல் ஆண்டு) என்று வைக்கப்பட்டது.

(தாரீக் தப்ரி, தொகுதி 2 பக்கம் 508 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவ்ஃப் பின் ஹாரிஸ் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: இந்த வருடத்தின் பெயர் ஆமுர் ரமாதா அதாவது சாம்பல் ஆண்டு ஆகும். அதற்கு காரணம் என்னவென்றால், மழை பொழியாததன் விளைவாக பூமி கருமையாகி சாம்பலைப் போன்று ஆகி விட்டது. இந்த நிலை ஒன்பது மாதம் வரை இருந்தது.

ஹஸாம் பின் ஹஷாம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டு மக்கள் ஹஜ்ஜிலிருந்து திரும்பி வந்தபோது அவர்களுக்கு கடுமையான துன்பம் ஏற்பட்டது. நாட்டில் வறட்சி காலம் பரவி விட்டது. விலங்குகள் மாண்டு போயின. மக்கள் பசியால் மரணிக்கத் தொடங்கினர். எந்த அளவுக்கு என்றால் மக்கள் அழுகிய எலும்புகளை அரைத்து அதை தண்ணீரில் போட்டு குடிக்கத் தொடங்கினர். மேலும் எலிகள் போன்றவற்றின் பொந்துகளைத் தேடினர். அதனுள் இருந்த எலிகளை வெறியேற்றத் தொடங்கினர்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் சாம்பல் ஆண்டில் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள்.

بسم الله الرحمن الرحيم அல்லாஹ்வின் அடியார் அமீருல் மூமினீன் உமரிடமிருந்து ஆஸி பின் ஆஸி அவர்களுக்கு. உங்கள் மீது சாந்தி உண்டாகட்டுமாக. اَمَّا بَعد நீங்களும் உங்களுடன் இருப்பவர்களும் உயிருடன் இருக்க, நானும், என்னுடன் இருக்கின்ற மக்களும் மரணித்துக் கொண்டிருப்பதை நீர் காண விரும்புகின்றீரா? அதில் அன்னார் உதவி; உதவி என மூன்று முறை எழுதினார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அதற்கு இவ்வாறு பதில் எழுதினார்கள்:

بسم الله الرحمن الرحيم அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை. அவனது அடியானிடமிருந்து இந்தக் கடிதம் அனுப்பப்படுகிறது. اَمَّا بَعد தங்களிடம் உதவி வந்து விட்டது. சிறிது நேரம் காத்திருங்கள். நான் தங்களிடம் ஒட்டகத்தின் ஒரு குழு ஒன்றை அனுப்புகின்றேன். அதன் முதல் ஒட்டகம் தங்களிடம் இருக்கும். கடைசி ஒட்டகம் என்னிடம் இருக்கும். அதாவது அவ்வளவு பெரியதாக இருக்கும். ஒரு நீண்ட வரிசையில் இருக்கும். எகிப்தின் ஆளுநர் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் உணவுப் பொருட்கள் மற்றும் தானியங்களைக் கொண்ட ஓராயிரம் ஒட்டகத்தை அனுப்பினார்கள். அதுமட்டுமின்றி நெய், ஆடைகள் போன்றவற்றையும் அனுப்பி வைத்தார்கள். ஈராக் ஆளுநர் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் இரண்டாயிரம் ஒட்டகங்களில் உணவுப் பொருட்கள் மற்றும் தானியங்களை அனுப்பினார்கள்.

அதுமட்டுமின்றி ஆடைகளையும் அனுப்பி வைத்தார்கள். முதல் தானியம் வந்தபோது ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாமிடம் நீங்கள் இந்த குழுவை நிறுத்தி அதனை பாதியாவாசிகளுக்கு அனுப்பி வையுங்கள் என்று கூறினார்கள். அதாவது கிராமத்தில் வசிப்பவர்களிடம் அதை அனுப்பி வைக்குமாறு கூறினார்கள். அவர்களுக்கு முதலில் கொடுங்கள். அவர்களுக்கு அதை பங்கிட்டுக் கொடுங்கள் என்று கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமைக்குப் பிறகு இதை விட சிறந்த எந்தப் பொருளும் உங்களுக்கு கிடைத்திருக்காது. அதனை சாக்குகளால் மூடி விடுவீர்களாக. அதனை அவர்கள் அணிந்து

கொள்ளட்டும். ஒட்டகங்களை அவர்களுக்காக அறுத்து விடுங்கள். மக்கள் அதன் இறைச்சியை உண்ணட்டும். மழை வரும் வரை நாம் காத்திருப்போம் என்று அவர்கள் கூறுவதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம். அவர்கள் கோதுமையை சமைக்கட்டும். மேலும் சேமித்துக் கொள்ளட்டும். எந்த அளவுக்கென்றால் அல்லாஹ் அவர்களுக்காக செழிமைக்கான கட்டளையை கொண்டு வருவான். அதாவது சிறிது சமைக்கட்டும்; உண்ணட்டும்; மேலும் சிறிதளவு சேமித்தும் கொள்ளட்டும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உணவை ஆயத்தம் செய்ய வைத்து இவ்வாறு அறிவிப்பு செய்ய வைத்தார்கள். அதாவது விரும்புகின்றாரோ உணவு நேரத்தில் ஆஜராக வேண்டும் என்றும், உணவு உண்ண வேண்டும் என்று எவர் விரும்புகின்றாரோ அவர் நிச்சயம் அவ்வாறு செய்து கொள்ளட்டும். மேலும் எவர் தமக்கும் தனது குடும்பத்திற்கும் உணவுக்கான ஏற்பாட்டைச் செய்து கொள்ள விரும்புகின்றாரோ அவர் வந்து அதனை எடுத்துச் செல்லட்டும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு சரீத் என்ற ஒரு வகை உணவை வழங்கினார்கள். அதாவது ரொட்டியை உடைத்து குழம்பில் முக்கி சமைக்கப்பட்ட உணவை மக்களுக்கு வழங்கி வந்தார்கள். அதாவது இந்த ரொட்டியுடன் ஆலிவ் எண்ணெய்யும் சேர்த்து சமைக்கப்பட்ட குழம்பு இருந்தது. அது உடனடியாக பெரும் பாத்திரங்களில் சமைக்கப்பட்டது. ஒட்டகங்கள் அறுக்கப்பட்டிருந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் மற்ற மக்களுடன் சேர்ந்து உணவு உண்டு வந்தார்கள். அவர்கள் உண்டதுபோல ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் உணவு உண்டு வந்தார்கள்.

அப்துல்லாஹ் பின் ஸைத் பின் அஸ்லம் தனது தந்தை அஸ்லம் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்ந்து அழுது கொண்டிருந்தார்கள். சாம்பல் ஆண்டின் காலகட்டத்தில் மாலை நேரத்தில் ஆலிவ் எண்ணெய் சேர்த்து சுடப்பட்ட ரொட்டிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கொண்டு வரப்பட்டன. மக்கள் ஒரு நாள் ஒட்டகத்தை பலியிட்டு உணவு சமைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்காக சிறந்த பகுதியை அவர்கள் வைத்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்த பகுதியில் முழங்கை மற்றும் கல்லீரலின் துண்டுகள் இருந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இவை எங்கிருந்து வந்தன? என்று கேட்டார்கள். அதற்கு அமீருல் மூமினீன் அவர்களே! இன்று நாங்கள் அறுத்த ஒட்டகங்களிலிருந்து இவை வந்துள்ளன என்று கூறப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், பரிதாபம்! பரிதாபம். இதன் நல்ல பகுதியை நான் சாப்பிட்டு விட்டு அதன் மோசமான பகுதியை மக்களுக்கு கொடுத்தால் நான் எவ்வளவு மோசமான ஆட்சியாளனாக இருப்பேன். இந்தப் பாத்திரத்தை எடுத்துச் செல்லுங்கள். இதைத்தவிர்த்து வேறு எதையாவது உண்பதற்கு எமக்கு கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள்.

எனவே ரொட்டி மற்றும் ஆலிவ் எண்ணெய் கொண்டு வரப்பட்டது. அன்னார் ரொட்டியை தனது கையால் பிய்த்தார்கள். மேலும் அதிலிருந்து ஸரீத் என்ற ஒரு வகையான உணவை சமைத்தார்கள். பின்னர் அன்னார் தனது வேலைக்காரரிடம் கூறினார்கள்: யர்ஃபாவே! உமக்கு நல்லது நடக்கட்டும். இந்த ஷமக் என்ற பாத்திரத்தை இன்ன குடும்பத்தினரிடம் கொண்டு செல்வீராக. ஷமக் என்பதும் மதீனாவிற்கு அருகில் இருந்த பேரீத்தம் பழங்களின் ஒரு தோட்டமாகும். அதன் உரிமையாளராக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் அந்த தோட்டத்தை வக்ஃப் செய்திருந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நான் மூன்று நாட்களாக அவர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. அவர்கள் வெறும் வயிற்றுடன் இருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். இதனை அவர்களுக்கு முன்னால் வைத்து விடுங்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

வறட்சி நாட்களில் இதற்கு முன்பு செய்திராத ஒரு பணியை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் செய்தார்கள். அது என்னவென்றால், அன்னார் மக்களுக்கு இஷா தொழுகையை நடத்தி விட்டு தனது வீட்டினுள் சென்று விடுவார்கள். இரவின் கடைசிப் பகுதி வரை தொடர்ந்து தொழுது கொண்டிருந்தார்கள். பின்னர் அன்னார் வெளியேறுவார்கள். மதீனாவின் பகுதிகளை சுற்றி வருவார்கள். ஓர் இரவின்போது சஹரி நேரத்தில் அன்னார் اَللّٰهُمَّ لَا تَجْعَلْ هَلَاكَ أُمَّةِ مُحَمَّدٍ عَلٰى يَدَيَّ என்று கூறுவதை செவியுற்றேன். அதாவது அல்லாஹ்வே! எனது கரங்களால் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்தை அழிவிற்குள்ளாக்காமல் இருப்பாயாக.

முஹம்மத் பின் யஹ்யா பின் ஹப்பான் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: வறட்சி நாட்களில் ஒரு முறை கொழுப்பில் நனைக்கப்பட்ட ரொட்டி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கொண்டு வரப்பட்டது. அன்னார் ஒரு காட்டரபியை தம்மிடம் அழைத்தார்கள். அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் அமர்ந்து கொண்டு உணவு உண்ணத் தொடங்கினார். அவர் வேக வேகமாக தட்டின் ஓரங்களில் இருந்த கொழுப்பை சுவைத்துக் கொண்டிருந்தார். இதுவரை கொழுப்பையே பார்த்திராததைப் போன்று நீங்கள் உணவை சாப்பிடுகின்றீர்களே? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு அவர் நிச்சயமாக நான் பல நாட்களாக நெய்யும் சாப்பிடவில்லை. ஆலிவ் எண்ணெய்யும் சாப்பிடவில்லை. மேலும் எவரும் உண்பதையும் நான் காணவில்லை.

இப்னு தாவூஸ் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இறைச்சியும் சாப்பிடவில்லை. நெய்யும் சாப்பிடவில்லை. அதாவது மக்களின் நிலை மகிழ்ச்சிகரமாக ஆகிவிடாத வரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நெய் போன்ற உணவு எதனையும் சாப்பிடவில்லை. வெறும் எண்ணெய் மட்டுமே உட்கொண்டதன் காரணமாக அன்னாரின் வயிற்றில் பிரச்சனை ஏற்பட்டு வந்தது. அன்னார் கூறினார்கள்: அதாவது தனது வயிற்றை நோக்கி, நீ இவ்வாறு இரைந்து கொண்டே இரு. அல்லாஹ்வின் மீது ஆணையாக! மக்கள் மகிழ்ச்சிகரமாக ஆகிவிடாத வரை உனக்கு எதுவும் கிடைக்காது. மேலும் மக்கள் முன்பு போல் உணவு உண்ண ஆரம்பிக்காத வரை உனக்கு எதுவும் கிடைக்காது என்று கூறினார்கள்.

இயாஸ் பின் கலீஃபா அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் வறட்சி ஆண்டில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை இவ்வாறு கண்டேன். அன்னாரின் நிறம் கருப்பாக இருந்தது. ஆனால் அதற்கு முன்பு அவர்களின் நிறம் வெண்மையாக இருந்தது. இது எவ்வாறு ஆனது? என்று நாங்கள் கேட்போம். அறிவிப்பாளர் இவ்வாறு கூறினார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஓர் அரபியாக இருந்தார்கள். அவர்கள் நெய் மற்றும் பாலை பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் மக்களுக்கு வறட்சி ஏற்பட்டபோது அன்னார் இந்தப் பொருட்களை தமக்கு ஹராமாக்கிக் கொண்டார்கள். மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பாத வரை அதனை தமக்கு தடை செய்து கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எண்ணெய்யுடன் உணவு உண்டு வந்தார்கள். அதன் காரணமாக அன்னாரின் நிறம் மாறிப்போனது. மேலும் பட்டினி கிடந்தபோது இந்த நிறம் மேலும் மாறிப்போனது.

உஸாமா பின் ஸைத் பின் அஸ்லாம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்: அல்லாஹ் வறட்சியை நீக்காவிட்டால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களைப் பற்றிய கவலையிலேயே மரணித்து விடுவார்கள் என்று நாங்கள் கூறிக் கொண்டிருந்தோம்.

ஸைத் பின் அஸ்லம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

வறட்சி காலத்தில் முழு அரபு நாட்டிலிருந்தும் மக்கள் மதீனாவிற்கு வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார்கள். அதாவது தமக்காக காத்திருக்கும்படியும், அவர்களுக்கு உணவு வழங்கும்படியும் கட்டளையிட்டார்கள். மதீனாவின் நாலாபுறமும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பல்வேறு சஹாபிகளை டியூட்டியில் அமர்த்தினார்கள். அவர்கள் ஒவ்வொரு நிமிடத்தின் செய்தியையும் சேகரித்து மாலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கொடுத்து வந்தார்கள். காலை

முதல் மாலை வரை கிடைத்த செய்திகளையெல்லாம் மாலையில் அன்னாரிடம் கொண்டு வரப்பட்டன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அந்த செய்திகள் கொண்டு சேர்க்கப்பட்டன.

மதீனாவின் பல்வேறு பகுதிகளில் காட்டரபிகள் வந்திருந்தார்கள். ஒரு நாள் மக்கள் உணவு உண்டு முடித்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நம்முடன் இரவு உணவு உண்ட மக்களை கணக்கீடு செய்யுங்கள். எனவே அவர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டபோது சுமார் 7000 நபர்கள் இருந்தார்கள். பின்னர் வராத மக்களையும், நோயாளிகளையும், குழந்தைகளையும் கணக்கிடும்படி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவர்கள் எண்ணப்பட்டபோது அவர்களின் எண்ணிக்கை 40,000 ஆக இருந்தது. சில நாட்களுக்குப் பிறகு இந்த எண்ணிக்கை அதிகரித்து. மீண்டும் எண்ணப்பட்டபோது உணவு உண்டு கொண்டிருந்த மக்களின் எண்ணிக்கை 10,000 ஆகவும், மற்றவர்களின் எண்ணிக்யை 50,000 ஆகவும் இருந்தது.

இதேபோன்று இந்தத் தொடர் சென்று கொண்டிருந்தது. எந்த அளவுக்கென்றால் அல்லாஹ் மழை பொழியச் செய்து விட்டான். மழை பெய்தபோது நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் கண்டேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனைத்து மக்களும் தத்தமது பகுதிகளுக்கு திரும்பிச் செல்வதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். மேலும் அவர்களுக்கு தேவையான தானியங்களையும், சவாரிகளையும் ஏற்பாடு செய்யும்படி கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நேரில் வந்து அவர்களை வழியனுப்பி வந்ததை நான் கண்டேன் என்று அறிவிப்பாளர் கூறுகின்றார்.

(அத்தப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 165 – 169 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 1 பக்கம் 234 – 2005 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது & ஃபத்ஹுல் பாரி ஷரஹ் சஹீஹுல் புகாரி தொகுதி 5 பக்கம் 460, 461 ஹதீஸ் எண் 2764 – 1986 ஆம் ஆண்டு காஹிராவில் அச்சிடப்பட்டது)

சுற்று வட்டாரத்திலுள்ள மக்கள் பசியின் காரணமாக தொல்லைக்கு உள்ளாகி நகரத்திற்கு வந்து விட்டார்கள். அவர்களுக்கு உணவு இங்கு தான் கிடைத்து வந்தது. நிலைமை சரியான பிறகும், மழை பெய்து விட்ட பிறகும் விவசாயம் செய்யக்கூடிய சூழல் உருவானது. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவர்களை திரும்பிச் செல்லும்படியும், உழைக்கும்படியும், தமது நிலங்களில் குடியேறும்படியும் கூறினார்கள்.

தப்ரீ வரலாற்று நூலில் இந்த வறட்சி முடிவிற்கு வந்தது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஒரு நபர் கனவில் கண்டார். அதன்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆவின் பக்கம் கவனமூட்டினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்திஸ்கா தொழுகை தொழப்படும் என்று அறிவிப்புச் செய்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

துயரம் தனது உச்சத்தை தொட்டு விட்டது. இனி இன்ஷா அல்லாஹ் முடிவு பெற இருக்கின்றது. எந்த சமுதாயத்திற்கு துஆவிற்கான நற்பேறு கிடைத்து விட்டதோ அவர்களின் துயரம் விலகி விட்டது என்று புரிந்து கொள்ள வேண்டும். அன்னார் ஏனைய நகரங்களின் கவர்னர்களின் பெயரில் கடிதங்களும் எழுதினார்கள். நீங்கள் மதீனா மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள இறை அடியார்களுக்காக இஸ்திஸ்கா தொழுகையை தொழுங்கள் என்று கூறினார்கள். ஏனென்றால் அவர்கள் துயரத்தின் உச்சத்தை அடைந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உமர்( (ரலி) அவர்கள் இஸ்திஸ்கா தொழுகையை தொழுவதற்காக வெளியில் மைதானத்தில் முஸ்லிம்களை ஒன்றுகூட்டினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களை அழைத்துக் கொண்டு அங்கு ஆஜரானார்கள். சுருக்கமாக குத்பா கொடுத்தார்கள். மேலும் தொழுகை நடத்தினார்கள். பின்னர் அமர்ந்து கொண்டு துஆ செய்யத் தொடங்கினார்கள்.

اَللّٰهُمَّ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ
نَسْتَعِينُ، اَللّٰهُمَّ اغْفِرْ لَنَا
وَارْحَمْنَا وَارْضَ عَنَّا

என்று துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! நாங்கள் உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவியும் வேண்டுகிறோம். அல்லாஹ்வே! எங்களை மன்னிப்பாயாக. எங்கள் மீது கருணை காட்டுவாயாக. எங்கள் மீது திருப்தி கொள்வாயாக.

அதன் பிறகு அன்னார் திரும்பி விட்டார்கள். அன்னார் வீட்டை அடைவதற்குள் மழையின் காரணமாக மைதானம் குளமாக மாறி விட்டது.

(தாரீக் தப்ரி, தொகுதி 2 பக்கம் 508, 509 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் துஆ செய்தவாறு இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வே! உனது நபியின் காலத்தில் எங்களிடம் வறட்சி காலம் வந்தபோது நாங்கள் உனது நபியின் மூலமாக மழைக்காக துஆ செய்து வந்தோம். எனவே நீயும் எங்கள் மீது மழை பொழியச் செய்து வந்தாய். இன்று நாங்கள் உனது நபியின் சிறிய தந்தையை கொண்டு உன்னிடம் துஆ செய்து கொண்டிருக்கின்றோம். எனவே நீ எங்கள் மீதான இந்த வறட்சி காலத்தை முடிவுக்கு கொண்டு வருவாயாக. மேலும் எங்கள் மீது மழையை இறக்குவாயாக. ஆக மக்கள் தற்போது தங்களது இடத்திலிருந்து விலகக்கூட இல்லை. அதற்குள் மழை பொழியத் தொடங்கி விட்டது.

(அத்தப்காத்துல் குப்ரா, தொகுதி 4 பக்கம் 21 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மஸ்ஜித் நபவியில் விரிப்பு விரிப்பதற்கான தொடர் எப்போது ஆரம்பமானது? முன்னர் மக்கள் அவ்வாறே தொழுது வந்தனர். நிலத்திலோ அல்லது வெறும் தரையிலோ தொழுது வந்தார்கள். அப்போது நெற்றியில் மண் ஒட்டி வந்தது. அதன் பிறகு விரிப்புக்கான வழக்கம் ஆரம்பமானது.

இது குறித்து அப்துல்லாஹ் பின் இப்ராஹீம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

மஸ்ஜிது நபவியில் முதல் முறையாக விரிப்பு விரித்த முதல் நபர் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஆவார்கள். மக்கள் சஜ்தாவிலிருந்து எழும்போது தனது கைகளிலிருந்த தூசியை தட்டி வந்தார்கள். அதன் அடிப்படையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விரிப்பு விரிக்க கட்டளையிட்டார்கள். ஆக அகீக் என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டு மஸ்ஜித் நபவியில் அது விரிக்கப்பட்டது. அகீக் என்பது ஓர் ஊரின் பெயராகும். அது மதீனாவின் தென் மேற்கிலிருந்து தொடங்கி வட மேற்கு வரை சுமார் 150 கிலோ மீட்டர் பரவியுள்ள இடமாகும். அது மாபெரும் பள்ளத்தாக்கு என்று கூறுகின்றனர்.

(அஸ்ஸீரத்துன் நபவி, தாருஸ் ஸலாம், ஹிஜ்ரி 1424 )

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு மஸ்ஜிது நபிவியின் விரிவாக்கப் பணி நடைபெற்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் பள்ளிவாசல் சுடாத செங்கல்களால் கட்டப்பட்டிருந்தது. அதனுடைய மேற்கூரை பேரீத்தம் பழ இலைகளால் கட்டப்பட்டிருந்தன. அதன்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

தூண்கள் பேரீத்தம் பழ மரத்தண்டுகளால் கட்டப்பட்டிருந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதனை அதே நிலையில் விட்டு விட்டார்கள். அதில் எந்த விரிவாக்கமும், மாற்றமும் செய்யவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை மீண்டும் கட்டி விரிவாக்கம் செய்தார்கள். ஆனால் அதனுடைய அமைப்பு மற்றும் கட்டுமான வழிமுறையில் எந்த மாற்றமும் செய்யவில்லை. அன்னாரும் அதனை அதே வழிமுறையிலேயே கட்டினார்கள். மேற்கூரை முன்பைப் போலவே பேரீத்தம் பழ இலைகளால் ஆகி இருந்தது. அன்னார் தூண்களை மரக்கட்டைகளால் உருவாக்கினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் தமது மேற்பார்வையில் பள்ளிக் கட்டுமானப் பணியை முழுமை செய்தார்கள். இந்த விரிவாக்கத்திற்குப் பிறகு பள்ளிவாசலின் பரப்பளவு கூடுதலாக 70 x 60 மீட்டர் கொண்டதாக ஆனது என்று இந்த அறிவிப்பிலிருந்து இது தெளிவாகின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்த பள்ளிவாசல் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்திலும் அப்படியே இருந்தது. எனினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீண்டும் கட்டி அதில் நிறைய விரிவாக்கம் செய்திருந்தார்கள்.

அபூ ஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். மஸ்ஜிது நபவி மீண்டும் கட்டப்பட வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டளை வழங்கினார்கள். மக்கள் மழையிலிருந்து பாதுகாப்பாக இருக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டார்கள். எனினும் நாங்கள் சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் அலங்காரம் செய்வதிலிருந்து விலகிக் கொண்டோம். ஏனென்றால் இதே நிறங்கள் மனிதனை துன்பங்களில் ஆழ்த்தி விடுகின்றன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிக்கனத்துடன் செயல்பட்டார்கள்.

மேலும் பள்ளிவாசலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் இருந்து வந்த அதே தோற்றம் மற்றும் அமைப்பிலேயே கட்டினார்கள். பள்ளிவாசல் விரிவாக்கம் செய்த நேரத்தில் பள்ளிவாசலுக்கு வட தெற்கிலும், தென்மேற்கிலும் இருந்த வீடுகளை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. சில மக்கள் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தமது நிலங்களை பள்ளிவாசலுக்காக அன்பளிப்பாக வழங்கி விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு சிலருக்கு புரிய வைத்து பொருளாதார உதவி செய்வதற்கான வழிமுறையை மேற்கொள்ள நேரிட்டது. இவ்வாறு சில நிலத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விலைக்கு வாங்கி பள்ளிவாசலுடன் இணைக்க நேரிட்டது.

(அப்துல் ஹமீத் காதிரி அவர்கள் எழுதிய , பக்கம் 459 – 2007 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான நடைமுறையும் தொடங்கியது. அல்லது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கள் தொகையை கணக்கெடுப்பு செய்தார்கள். மேலும் ரேஷனிங் சிஸ்டம் உணவுக்காக ஏற்படுத்தப்பட்டது.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள். அதாவது இஸ்லாமிய அரசாங்கத்தின் செயல் திட்டங்கள் எவ்வாறு இருந்தன? என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டன? என்பது பற்றி அன்னார் எழுதியுள்ளார்கள். மேலும் என்னென்ன புதிய விஷயங்கள் நிர்வாக விவகாரங்களில் உருவாகின? மற்றும் தொடங்கின? என்பது பற்றியும் எழுதியுள்ளார்கள்.

அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்து செய்த முதல் பணி என்னவென்றால், அன்னார் சொத்துக்கள் கொண்டவர்களை எந்த சொத்தும் இல்லாதவர்களுக்கு சகோதரர்களாக்கி விட்டார்கள். அன்ஸார் சகோதரர்கள் சொத்துக்களுக்கு எஜமானராக இருந்தார்கள். முஹாஜிர் சகோதரர்கள் எந்த சொத்தும் இல்லாதவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார் மற்றும் முஹாஜிர்கள் இருவருக்குமிடையிலும் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

ஒவ்வொரு சொத்துடையவரையும், சொத்தில்லாத ஒவ்வொருவருடனும் சேர்த்து விட்டார்கள். இதில் சில மக்கள் எந்த அளவிற்கு அதிகப்படியாக செயல்பட்டார்கள் என்றால் செல்வம் ஒரு பக்கம் இருக்கட்டும். ஒருவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர் என்றால் அவர்கள் தத்தமது முஹாஜிர் சகோதரர்களுக்காக இந்த விஷயத்தை முன் வைத்தார்கள். அதாவது அவர்கள் முஹாஜிர் சகோதரர்களுக்காக தமது ஒரு மனைவியை தலாக் கொடுப்பதற்கும் ஆயத்தமாக இருந்தார்கள். மேலும் அவர்களை அவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம் என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா சென்றவுடன் அங்கு நிலைநாட்டிய சமத்துவத்திற்கான முதல் முன்னுதாரணம் இதுவாகும். ஏனென்றால் அரசாங்கத்திற்கான அடித்தளம் உண்மையில் மதீனாவிலேயே உருவாகி இருந்தது. அக்காலத்தில் அதிக செல்வங்கள் இருந்திருக்கவில்லை. செல்வந்தர் மற்றும் ஏழை அனைவரும் உண்பதற்கு ஏதாவது பொருள் கிடைத்து விட வேண்டும் என்பதற்காக செல்வந்தர் மற்றும் ஏழைகள் இணைக்கப்பட்டார்கள்.

அடுத்து ஒரு போரின் சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வழிமுறையை பயன்படுத்தினார்கள். ஒரு வகையில் அதன் வடிவத்தை மாற்றினார்கள். ஒரு போரின் சந்தர்ப்பத்தில் சில மக்களிடம் உண்பதற்கு எதுவும் இல்லை. ஒருவேளை இருந்தாலும் கூட மிகவும் குறைவாகவே இருந்தது. சிலரிடம் மிக அதிகமாக பொருள்கள் இருக்கின்றன என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தது. இந்த நிலையைக் கண்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார் யாரிடம் என்னவெல்லாம் உள்ளதோ அவர் அதை எடுத்து வரட்டும். மேலும் ஓரிடத்தில் அது ஒன்றுகூட்டப்படட்டும் என்று கூறினார்கள்.

எனவே அனைத்துப் பொருட்களும் கொண்டு வரப்பட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரேஷன் முறையை அமல்படுத்தினார்கள். ஒருவகையில் அனைவருக்கும் உணவு கிடைத்து விட வேண்டும் என்ற வழிமுறை இங்கும் வந்து விட்டது. சாத்தியம் இருந்த வரை மக்கள் தனித்தனியாக உணவு உண்டு வந்தனர். ஆனால் அது சாத்தியமற்றதாக ஆகிவிட்டபோது மேலும் சில மக்கள் பசியுடன் இருந்து விடுவார்கள் என்ற அபாயம் உருவாகியபோது இனி உங்களுக்கு தனியாக உண்பதற்கு அனுமதி இல்லை. அனைவருக்கும் ஓரிடத்தில் சமமாக உணவு கிடைக்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உரிய சந்தர்ப்பத்திற்கேற்ப இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது. (அப்போது) எவரும் சோஷியலிஸம் மற்றும் கம்யூனிஸத்தின் கருத்துக்களை நிலைநாட்டி இருக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் சஹாபிகள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த கட்டளையின்படி நாங்கள் எந்த அளவுக்கு கடுமையாக அமல் செய்தோம் என்றால் ஒருவேளை எங்களிடத்தில் பேரீத்தம் பழங்கள் மட்டுமே இருந்திருந்தாலும் அதனை உண்பதை மிகப்பெரும் மோசடியாக கருதி வந்தோம். அதனை ஸ்டோரில் கொண்டு சேர்த்திராத வரை நாங்கள் நிம்மதியாக இருந்ததில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னுதாரணம் மற்றொரு பக்கம் நிலைநாட்டப்பட்டது. மோசமான நிலைமை இருந்த வரை இந்த நிலையே தொடர்ந்து வந்தது. இந்த முன்னுதாரணத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் செல்வம் வந்தது. கருவூலங்களின் வாசல்களை அல்லாஹ் இஸ்லாத்திற்காக திறந்து கொடுத்தான். ஆயினும் இது தொடர்பான விரிவான அமைப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகு ஏற்பட வேண்டும் என அல்லாஹ் விரும்பி இருந்தான். ஏனென்றால் இவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மட்டுமான சிறப்பாக இருந்தது என்றும், வேறு எவரும் இதை ஏற்படுத்த முடியாது என்றும் மக்கள் கூறி விடாமல் இருப்பதற்காகவும் அல்லாஹ் இவ்வாறு செய்தான். செல்வங்கள் வந்ததும் பழைய அமைப்பு நிறுவப்பட்டது. ஆனால் பின்னரும் கூட அதனை அல்லாஹ் தொடர்வதற்கான

ஏற்பாட்டைச் செய்தான். அது எப்படி?

அன்னார் எழுதுகின்றார்கள்: ஒரு பக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களால் ஒரு முன்னுதாரணத்தை அல்லாஹ் நிலைநாட்டினான். மற்றொரு பக்கம் மதீனா வந்தடைந்ததும் அன்ஸார் சகோதரர்கள் தமது செல்வங்களை முஹாஜிர் சகோதரர்களுக்கு முன்னால் வைத்து விட்டார்கள். நாங்கள் இந்த நிலங்களை இலவசமாக பெற தயாராக இல்லை என்று முஹாஜிர் சகோதரர்கள் கூறினர். நாங்கள் இந்த நிலத்தில் விவசாயிகளாக பணி செய்வோம். உங்களுக்குரிய பங்கை உங்களுக்கு வழங்குவோம். ஆனால் இது முஹாஜிர்கள் தரப்பிலிருந்து தமது ஒரு ஆசையின் வெளிப்பாடாக இருந்தது. அன்ஸார் சகோதரர்கள் தமது செல்வங்களை கொடுப்பதில் எந்த வகையிலும் தயங்கவில்லை.

இது எப்படிப்பட்ட விஷயம் என்றால் உதாரணமாக, அரசாங்கம் ரேஷன் பொருட்களைக் கொடுத்து அதனை ஒருவர் மறுப்பது போன்றதாகும். இதனால் அரசாங்கத்தின் மீது எந்த குற்றச்சாட்டும் வராது. எனவே அரசாங்கம் ரேஷனை நிர்ணயித்திருந்தது என்றே கூற வேண்டும். இப்போது அதை வாங்குவதும், வாங்காமல் இருப்பதும் மற்றவரின் விருப்பமாக இருந்தது. இதேபோன்று அன்ஸார் சகோதரர்கள் அனைத்தையும் கொடுத்து விட்டார்கள். முஹாஜிர்கள் பெறவில்லை என்பது ஒரு தனி விஷயமாகும்.

சுருக்கமாக, செயல் ரீதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தப் பணியை தனது வாழ்விலேயே தொடங்கி இருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் பஹ்ரைன் நாட்டு அரசர் முஸ்லிமாகிவிட்டபோது உங்களது நாட்டில் எந்த நபரிடத்தில் வாழ்க்கையை கழிப்பதற்கு எந்த நிலமும் இல்லையோ அவர்களில் ஒவ்வொருவருக்கும் நான்கு தர்ஹம் மற்றும் உடுப்பதற்கான ஆடையையும் கொடுங்கள் என கட்டளையிட்டார்கள். ஏனென்றால் அவர்கள் பசியுடனும், நிர்வாணத்துடனும் இருக்கக்கூடாது என்பதற்காக இந்தக் கட்டளையை பிறப்பித்தார்கள்.

இதன் பிறகு முஸ்லிம்களிடத்தில் செல்வங்கள் வரத் துவங்கின. முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. செல்வம் அதிகமாக இருந்தது. எனவே ஒரு புதிய சட்டத்தை பயன்படுத்துவதற்கான தேவையை அப்போது உணரவில்லை. ஏனென்றால் நோக்கம் அப்போது நிறைவேறிக் கொண்டிருந்தது. அடிப்படை என்னவென்றால், அபாயம் ஏற்படும்போது சட்டம் உருவாக்கப்படுகின்றது. அபாயம் இல்லாதபோது அந்த சட்டத்தை உருவாக்குவதற்கும், உருவாக்காமல் இருப்பதற்கும் அரசாங்கத்திற்கு அனுமதி இருந்தது.

பின்னர் நான் துவங்கிய விஷயம் அதாவது நான் எடுத்துக் கூற விரும்பிய விஷயம் வேறொன்றாக இருந்தது. இடையில் மற்றொரு விளக்கம் வந்து விட்டது. அந்த விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த அமைப்பு எவ்வாறு தொடர்ந்தது என்பதாகும்?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்துவிட்டபோதும், முஸ்லிம்கள் உலகின் பல்வேறு மூலைகளில் பரவத் தொடங்கியபோதும் அந்நிய சமுதாயங்கள் இஸ்லாத்தில் நுழைந்து விட்டன. அரபு மக்கள் ஒரு கூட்டமாகவும், ஒரு சமுதாய வடிவிலும் இருந்தனர். அவர்கள் தங்களுக்குள் சமத்துவத்தையும் நிலைநாட்டி இருந்தனர். இஸ்லாம் பல்வேறு திசைகளில் எட்டியபோதும், பல்வேறு சமுதாயங்கள் இஸ்லாத்தில் நுழையத் தொடங்கியபோதும் அவர்களுக்கான உணவிற்கான ஏற்பாடு மிக கடினமானதாக ஆகிவிட்டது. இறுதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி அனைத்து மக்களையும் கணக்கெடுத்தார்கள். மேலும் ரேஷனிங் சிஸ்டத்தை நிலைநாட்டினார்கள். அது பனூ உமைய்யா காலகட்டம் வரை நிலைபெற்றிருந்தது.

முதன் முதலில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்தான் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தினார்கள் என்பதை ஐரோப்பிய வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக் கொள்கின்றனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொது மக்களிடமிருந்து செல்வத்தை பறிப்பதற்காக முதன் முதலில் இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தவில்லை. மாறாக, அவர்களின் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்வதற்காக நடத்தினார்கள் என்பதையும் அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். மக்களை பலிகடாவாக ஆக்குவதற்காக அரசாங்கங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துகின்றன. மேலும் இராணுவத் தொண்டுகள் வாங்குவதற்காகவும் நடத்துகின்றன. ஆனால் மக்களை பலிகடாவாக ஆக்குவதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தவில்லை. மாறாக, அவர்களின் வயிற்றுக்கு உணவிற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். மேலும் எத்தனை மக்கள் இருக்கின்றார்கள்? எவ்வளவு உணவிற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்பதற்காக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தினார்கள்.

ஆக மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகு அனைத்து மக்களுக்கும் ஒரு முறையான அமைப்பிற்கேற்ப உணவு கிடைத்தது. மேலும் எஞ்சிய தேவைகளுக்கு மாதம் மாதம் கொஞ்சம் ரொக்கமும் வழங்கப்பட்டன. இது பற்றி எந்த அளவுக்கு எச்சரிக்கையுடன் பணி செய்யப்பட்டதென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் சிரியா வெற்றி கொள்ளப்பட்டபோது அங்கிருந்து ஏராளமான ஆலிவ் எண்ணெய் கிடைத்தது. ஒவ்வொருவருக்கும் ஆலிவ் எண்ணெய் கிடைக்கத் தொடங்கியது. எனவே ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆலிவ் எண்ணெய்யை அதிகமாக பயன்படுத்துவதால் எனது வயிறு வீங்கி விடுகின்றது என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் ஆலிவ் எண்ணெய் கிடைத்து வந்தது. அப்போது அன்னார் நான் ஆலிவ் எண்ணெய்யை பயன்படுத்துகின்றபோது எனது வயிறு வீங்கி விடுகிறது. நீங்கள் எனக்கு அனுமதி தந்தால் அதே விலைக்கு நான் பைத்துல் மாலிலிருந்து (அதற்கு பகரமாக) நெய்யை எடுத்துக் கொள்வேன் என்று கூறினார்கள்.

ஆலிவ் எண்ணெய் எனது உடலுக்கு சரியாக இல்லாததால் ஆலிவ் எண்ணெய் எவ்வளவு விலை இருக்குமோ அதே விலையில் நான் நெய்யை எடுத்துக் கொள்கிறேன் என்று கூறினார்கள்.

சுருக்கமாக, மக்களின் தேவைகளை முழுமை செய்வதற்காக இஸ்லாம் எடுத்த முதல் நடவடிக்கை இதுவாக இருந்தது. இந்த அமைப்பு நிலைபெற்று விட்டால் அதற்குப் பிறகு வேறு எந்தவொரு அமைப்பின் அவசியமும் இருக்காது என்பது வெளிப்படையாகும். ஏனென்றால் முழு நாட்டினுடைய தேவைகளை முழுமை செய்கின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கும். அவர்களின் உணவு, அவர்களின் குடிநீர், அவர்களின் ஆடை, அவர்களின் கல்வி, அவர்களின் நோய்களுக்கான சிகிச்சை மேலும் அவர்களின் தங்குமிடத்திற்கான வீடுகளுக்கான கட்டுமானம் இவை அனைத்தும் இஸ்லாமிய அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்.

இந்த தேவைகள் முழுமையடைந்து கொண்டிருந்தால் பின்னர் வேறெந்த காப்பீடு திட்டங்களுக்கும் அவசியம் இருக்காது. மக்கள் காப்பீடு ஏன் செய்கின்றார்கள் என்றால் நாம் பிற்காலத்தில் தமது பிள்ளைகளுக்காக எதையாவது விட்டுச் செல்ல வேண்டும் என்றோ அல்லது முதுமையில் சம்பாதிக்க முடியாதபோது தமது தேவைகள் முழுமையாக வேண்டும் என்பதற்காகவும் காப்பீடு திட்டங்களில் பங்கு பெறுகின்றனர். அரசாங்கம் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்போது பின்னர் எந்த காப்பீட்டுத் திட்டத்திற்கும் அவசியம் இருக்காது.

பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: பிற்காலத்தில் வரக்கூடியவர்கள் இவ்வாறு கூறத் தொடங்கி விட்டனர். அதாவது இது அரசனின் விருப்பத்தை சார்ந்ததாக இருக்கும். அவர் யாருக்கு விரும்புவாரோ கொடுத்து விடுவார். விரும்பவில்லை என்றால் கொடுக்க மாட்டார். இஸ்லாமிய போதனைகள் அப்போது முழுமையாக அமல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே அவர்கள் கைஸர் மற்றும் கிஸ்ராவின் வழிமுறையின் பக்கம் ஈர்க்கப்பட்டு விட்டார்கள். எவ்வாறு மற்ற அரசர்கள் செய்து வந்தார்களோ அதே வழிமுறை அமல்படுத்தப்பட்டது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 7 பக்கம் 334–336)

ஒவ்வொரு நபருக்கும் இஸ்லாமிய

அரசாங்கம் உணவு, உடைக்கான ஏற்பாட்டைச் செய்வது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:

இஸ்லாமிய அரசாங்கம் செல்வங்களுக்கு அதிபதியாக ஆனபோது அது ஒவ்வொரு நபருக்கும் உணவு மற்றும் உடைக்கான ஏற்பாட்டைச் செய்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் அமைப்பு முழுமை பெற்றது. எனவே அப்போது இஸ்லாமிய போதனையின் கீழ் ஒவ்வொரு தனி நபருக்கும் உணவு மற்றும் உடைக்கான ஏற்பாட்டைச் செய்வது அரசாங்கத்தின் கடமையாக இருந்தது. மேலும் அது தனது இந்த கடமையை முழுமையான பொறுப்புடன் நிறைவேற்றியது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த நோக்கத்திற்காக மக்கள் தொகை கணக்கெடுப்பு முறையை நடைமுறைப்படுத்தினார்கள். பதிவேடுகளை உருவாக்கினார்கள். அதில் அனைத்து மக்களின் பெயர்களும் பதியப்பட்டு வந்தன. ஏற்கனவே கூறப்பட்டது போன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்தான் முதலில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தினார்கள் என்பதை ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் கூட ஒப்புக் கொள்கின்றனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பதிவேடுகளின் வழிமுறையையும் நடைமுறைப்படுத்தினார்கள். ஒவ்வொரு நபருக்கும் உணவு மற்றும் உடை கொடுக்கப்பட்டு வந்ததன் காரணமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு செய்யப்பட்டது. இந்த நாட்டில் எத்தனை மக்கள் இருக்கின்றனர் என்பதை அரசாங்கம் அறிந்து வைப்பது அவசியமாக இருந்தது.

சோவியத் ரஷ்யா ஏழைகளின் உணவிற்கும் அவர்களின் உடைக்குமான ஏற்பாட்டைச் செய்தது என்று இன்று கூறப்படுகிறது. உள்ளபடியே முதன் முதலில் இதுபோன்ற பொருளாதார அமைப்பை இஸ்லாம் தான் நடைமுறைப்படுத்தியது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் செயல் வடிவில் ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நகரத்திலும் வசித்து வந்த அனைத்து மக்களின் பெயர்களும் பதிவேடுகளில் பதியப்பட்டு வந்தன. ஒவ்வொரு நபரின் மனைவி மற்றும் அவருடைய பிள்ளைகளின் பெயர்கள் மற்றும் அவர்களின் எண்ணிக்கை ஆகியவை பதியப்பட்டு வந்தன. பின்னர் ஒவ்வொரு நபருக்கும் உணவிற்கு ஓர் அளவுகோல் வரையறுக்கப்பட்டிருந்தது. ஏனென்றால் குறைவாக உண்பவர்களுக்கும் போதுமானதாக இருக்க வேண்டும். அதிகமாக உண்ணக் கூடியவர்களும் தனது விருப்பத்திற்கேற்ப உண்ண வேண்டும் என்ற அடிப்படையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

வரலாற்றில் குறிப்பு வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் துவக்கத்தில் எடுத்த முடிவில் பால்குடி குழந்தைகளை கருத்தில் கொள்ளப்படவில்லை. மேலும் அப்போது தாய்மார்கள் தமது பிள்ளைகளுக்கு பால்குடியை மறக்கடிக்கச் செய்த பிறகுதான் தானியங்கள் வடிவில் உதவிகள் கிடைக்கத் தொடங்கி இருந்தன.

நான் கடந்த குத்பாவில் கூறியிருந்ததுபோன்று ஓர் இரவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களின் நிலைகளை அறிவதற்காக ரோந்து சென்று கொண்டிருந்தார்கள். ஒரு கூடாரத்திலிருந்து ஒரு குழந்தையின் அழு குரல் வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கு நின்று கொண்டார்கள். ஆனால் குழந்தை அழுது கொண்டே சென்றது. தாய் அதனை தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அது தூங்கி விட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தாள். நீண்ட நேரம் ஆகிவிட்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தக் கூடாரத்தினுள் சென்றார்கள். நீங்கள் குழந்தைக்கு பால் ஏன் கொடுப்பதில்லை? இது எவ்வளவு நேரமாக அழுது கொண்டிருக்கிறது? என்று அந்தப் பெண்ணிடம் கேட்டார்கள். அந்தப் பெண்மணியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அடையாளங்கண்டு கொள்ள முடியவில்லை. யாரோ சாதாரண நபர் என்று அந்தப் பெண் கருதினாள்.

எனவே அவர் இவ்வாறு பதிலளித்தார்: உங்களுக்குத் தெரியாதா என்ன? (தாய்ப்) பால் குடிக்கின்ற பிள்ளைகளுக்கு தானியம் கிடைக்காது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முடிவெடுத்திருக்கின்றார்கள். நாங்கள் ஏழைகளாக இருக்கின்றோம். எங்களது வாழ்க்கை கஷ்டத்தில் கழிகின்றது. பைத்துல் மாலிலிருந்து இதற்குரிய தானியம் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் இந்த பிள்ளைக்கு தாய்ப்பாலை மறக்கடித்து விட்டேன். இப்போது இது அழுகின்றதென்றால் அழுட்டும். இதுபோன்ற சட்டத்தை உருவாக்கிய ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே இதற்கு பொறுப்பு என்று அந்தப் பெண்மணி கூறினார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்போதே திரும்பிச் சென்றார்கள். உமர்! உமக்குத் தெரியாதா? நீர் இந்த சட்டத்தால் எத்தனை அரபு குழந்தைகளின் தாய்ப்பாலை தடுக்கச் செய்து அடுத்த தலைமுறையை பலவீனமாக்கி விட்டீரோ? தெரியவில்லை. இந்த அனைத்து பாவமும் இனி உமது பொறுப்பாகும் என்று வழியில் மிகுந்த வேதனையுடன் கூறிக் கொண்டே சென்றார்கள். இவ்வாறு கூறிக்கொண்டு அன்னார் (ரலி) அவர்கள் குடோனிற்கு சென்றார்கள். கதவு திறந்திருந்தது. ஒரு மூட்டை கோதுமை மாவை தமது முதுகில் சுமந்து கொண்டார்கள். அதைத் தாருங்கள். நான் அதனை சுமந்து கொள்கிறேன் என்று ஒருவர் கூறினார். முடியாது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். தவறு என்னுடையதாகும். இதற்கான பரிகாரத்தை நானே செய்ய வேண்டும் என்பது தற்போது அவசியமாகும். எனவே ஒரு மூட்டை கோதுமையை அன்னார் அந்தப் பெண்ணிற்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். எந்த நாள் குழந்தை பிறக்குமோ அதே நாளிலிருந்து அதற்கான தானியம் நிர்ணயம் செய்யப்படும். ஏனென்றால் அந்தக் குழந்தையின் தாய் அதற்கு பாலூட்டுகின்றாள். அதிகமாக உணவின் தேவையுடையவளாக அவள் இருக்கின்றாள் என்று இரண்டாவது நாளே கட்டளையிட்டார்கள்.

(இஸ்லாம் கா இக்திஸாதி நிஸாம், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 61,62)

அடுத்து இஸ்லாம் தான் நாட்டின் உரிமைகளையும் நிலைநாட்டியுள்ளது என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். இஸ்லாத்தின் பார்வையில் ஒவ்வொரு நபரின் உணவும், இருப்பிடமும், உடையின் பொறுப்பும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இஸ்லாம் மட்டுமே முதன் முதலில் இந்த விதிமுறையை நடைமுறைப்படுத்தி உள்ளது. தற்போது ஏனைய அரசாங்கங்களும் இதனை காப்பி அடிக்கின்றனர். ஆயினும் முழுமையான முறையில் அல்ல. காப்பீடு திட்டங்கள் செய்யப்படுகின்றன. குடும்ப ஓய்வூதியங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் இளமையிலும், முதுமையிலும் இரண்டு நிலையிலும் உணவு, உடைக்கான பொறுப்பு அரசாங்கத்திற்குரியதாகும்.

இந்த விதிமுறையை இஸ்லாத்திற்கு முன்பு வேறு எந்த மார்க்கமும் முன் வைக்கவில்லை. உலகியல் அரசாங்கங்களின் மக்கள் தொகை கணக்கெடுப்புகள் வரி வசூல் செய்து கொள்வதற்காகவோ அல்லது ராணுவத்தில் ஆள் சேர்ப்பது தொடர்பாக அதாவது தேவையின்போது எத்தனை இளைஞர்கள் கிடைப்பார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காகவோ செய்கின்றன. ஆனால் இஸ்லாமிய அரசாங்கம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் முதன் முதலில் மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தியது. மக்களுக்கு உணவு மற்றும் உடை ஆகியவற்றை ஏற்பாடு செய்து கொடுப்பதற்காக நடத்தப்பட்டது. மாறாக, வரி வசூல் செய்வதற்காகவோ அல்லது தேவையின்போது ராணுவத்திற்கு எத்தனை இளைஞர்கள் கிடைப்பார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காகவோ இருக்கவில்லை. மாறாக,

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

ஒவ்வொரு நபருக்கும் உணவு மற்றும் உடைக்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்தது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆயினும் அந்த நேரத்தில் இஸ்லாமிய அரசாங்கம் அல்லது ஆட்சி முஸ்லிம்களுக்கு கிடைத்திருக்கவில்லை. எனவே அந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் நோக்கம் முஸ்லிம்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்வதற்காகவே இருந்தது.

இஸ்லாமிய அரசாங்கத்தின் காலத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் தான் முதன் முதலில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மேலும் ஒவ்வொரு நபருக்கும் உணவு மற்றும் உடை ஆகியவற்றை வழங்குவதற்காக அது நடத்தப்பட்டது. இது எத்தனை பெரிய விஷயமாகும். இதன் மூலம் முழு உலகிலும் அமைதி நிலைபெற்று விடுகின்றது.

விண்ணப்பம் கொடுங்கள். பரிசீலிக்கப்படும் என்று மட்டும் கூறுவதை எல்லா மனிதனின் தன்மானமும் பொறுத்துக் கொள்வதில்லை. விண்ணப்பங்கள் பெறப்பட்டால் பின்னர் பரிசீலிக்கப்படவும் வேண்டும். எனவே உணவு மற்றும் உடைக்கான ஏற்பாட்டைச் செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்ற விதிமுறையை இஸ்லாம் வரையறுத்தது. ஒவ்வொரு ஏழைக்கும் செல்வந்தருக்கும் வழங்கப்படும். ஒருவர் எவ்வளவு தான் கோடீஸ்வரராக இருந்தாலும் சரியே! அவர் அதனை தான் பெற்று வேறு ஒருவருக்கு கொடுத்துக் கொள்ளட்டும். ஏனென்றால் அவர் கீழானவராக கருதப்பட்டார் என்ற எண்ணம் எவருக்கும் உருவாகக்கூடாது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 308)

செல்வந்தருக்கு வழங்கப்பட்டால் அந்த செல்வந்தர் இறையச்சத்தின்படி நடக்கும்போது அவர் அதிலிருந்து பயன் பெறுவதற்கு பகரமாக அவர் அதனை ஏழைகளுக்கு கொடுத்து விடுவார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நாடுகள் மாநிலங்களாக பிரிக்கப்பட்டன. ஹிஜ்ரி 20 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட நாடுகளின் நிர்வாக விவகாரங்களை எளிமையாக்குவதற்காக எட்டு மாநிலங்களாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பிரித்தார்கள். (1) மக்கா (2) மதீனா (3) சிரியா (4) ஜஸீரா (5) பஸ்ரா (6) கூஃபா (7) எகிப்து (8) பாலஸ்தீன்

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 185 – 1991 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஷூரா எனும் அமைப்பு அன்னாரின் காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டது. மஜ்லிஸே ஷூராவில் எப்போதும் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் என்ற இரண்டு கூட்டத்தினரின் உறுப்பினர்கள் கண்டிப்பாக பங்கு பெற்று வந்தார்கள். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரம் என்ற இரண்டு கோத்திரத்தில் அன்ஸார் பரிக்கப்பட்டிருந்தார்கள். எனவே இந்த இரண்டு கோத்திரங்களின் குடும்பங்களும் மஜ்லிஸே ஷூராவில் பங்கு பெறுவது அவசியமாக இருந்தது.

இந்த மஜ்லிஸே ஷூராவில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் மஅஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் சாபித் (ரலி) ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். கூட்டம் கூட்டப்படுவதற்கான நடைமுறை இவ்வாறாக இருந்தது.

اَلصَّلٰوۃُ جَامِعَۃٌ அதாவது அனைத்து மக்களும் தொழுகைக்காக ஒன்றுகூடுங்கள் என்று முதலில் ஓர் அறிவிப்பாளர் அறிவிப்பு செய்து வந்தார். அனைத்து மக்களும் ஒன்றுகூடியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவிக்கு சென்று இரண்டு ரக்அத் தொழுகையை நிறைவேற்றுவார்கள். தொழுகைக்குப் பிறகு மேடையில் நின்று குத்பா கொடுத்து வந்தார்கள். இபாதத்திற்குரிய அம்சம் முன் வைக்கப்பட்டு வந்தது. அதில் விவாதமும் நடைபெற்றது. சாதாரண மற்றும் அன்றாட வியாபாரத்தில் இந்த கூட்டத்தின் தீர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது. ஆனால் ஏதாவதொரு முக்கியமான விவகாரம் வந்தால் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் சகோதரர்கள் கொண்ட பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அனைவருடைய ஒப்புதலுடனும் அந்த விவகாரம் தீர்மானிக்கப்பட்டு வந்தது.

படை வீரர்களின் சம்பளம், அலுவலகங்களின் ஒழுங்கு, ஊழியர்களின் நியமனம், அந்நிய சமுதாயங்களின் வியாபாரத்திற்கான சுதந்திரம் மேலும் அதில் பெறப்பட வேண்டிய தொகையை நிர்ணயம் செய்தல் சுருக்கமாக இதுபோன்ற ஏராளமான விவகாரங்கள் ஷூராவில் முன் வைக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டு வந்தன. மஜ்லிஸே ஷூராவின் கூட்டம் பெரும்பாலும் மிகவும் சிறப்பான தேவையின்போது நடைபெற்று வந்தது.

இதுமட்டுமின்றி மற்றொரு கூட்டமும் நடைபெற்று வந்தது. அங்கு தினமும் நிர்வாகங்கள் மற்றும் தேவைகளைப் பற்றி விவாதிக்கப்பட்டு வந்தது. இந்த சபை எப்போதும் மஸ்ஜிது நபவியில் கூட்டப்பட்டு வந்தது. அதில் முஹாஜிர் சஹாபிகள் மட்டும் பங்கு பெற்று வந்தனர். மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களைப் பற்றி தினசரி செய்திகள் கிலாஃபத்தின் சபையில் வந்தடைந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த கூட்டத்தில் உரையாற்றி வந்தார்கள். ஏதாவது விவாதத்திற்குரிய விஷயங்கள் இருந்தால் அதில் மக்களிடமிருந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கருத்துக்களைப் பெற்று வந்தார்கள். மஜ்லிஸே ஷூராவின் ஊழியர்கள் மட்டுமின்றி அன்றாட விவகாரங்களில் பொது மக்களின் பங்களிப்பும் இருந்து வந்தது. மாநிலங்கள் மற்றும் மாவட்டத்தின் அதிகாரிகள் பெரும்பாலும் பொது மக்களின் விருப்பத்திற்கேற்ப நியமிக்கப்பட்டு வந்தனர்.

இன்னும் கூறப்போனால் சில நேரத்தில் முற்றிலும் தேர்தலுக்கான வழிமுறை அமல்படுத்தப்பட்டு வந்தது. கூஃபா, பஸரா மற்றும் சிரியாவில் அதிகாரிகள் வரியை நியமனம் செய்ய தொடங்கியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த மூன்று மாநிலங்களுக்கும் இவ்வாறு கட்டளைகளை அனுப்பினார்கள். அங்குள்ள மக்கள் தத்தமது விருப்பத்திற்கேற்ப ஒரு நபரை தேர்ந்தெடுத்து அனுப்பட்டும். அவர் மக்களின் பார்வையில் அனைவரையும் விட நேர்மையானவராகவும், தகுதிவாய்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 180–182 – 1991 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஊழியர்களின் நியமனம் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் என்ன? ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எவ்வாறு வழிகாட்டல் வழங்கி வந்தார்கள்? என்பது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

முக்கியப் பொறுப்புகளுக்கான பொறுப்பாளர்களின் நியமனம் மஜ்லிஸே ஷூராவின் மூலம் நடைபெற்றது. எவரை அனைத்து உறுப்பினர்களும் ஒப்புக் கொள்வார்களோ அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். சில நேரத்தில் எவர் தகுதியானவரோ அவரை தேர்ந்தெடுத்து அனுப்புங்கள் என்று மாநிலம் மற்றும் மாவட்டத்தின் அதிகாரிக்கு கட்டளைகள் அனுப்பப்படும்.

எனவே இதே தேர்தல் வழிமுறையின்படிதான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதிகாரிகளை நியமித்து வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதிகாரிகளுக்கு அதிக சம்பளத்தை நிர்ணயித்திருந்தார்கள். இதில் ஒரு பெரும் நுட்பம் இருந்தது. ஏனென்றால் நேர்மையுடன் இந்த மக்கள் தமது பணியை செய்ய வேண்டும் என்பதற்காகவும் அவர்களிடம் உலகப் பேராசை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் அவ்வாறு

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

செய்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொறுப்பாளர்களுக்கு இவ்வாறு அறிவுரை வழங்கி இருந்தார்கள். நினைவிற் கொள்ளுங்கள்! நான் உங்களை மக்களின் அமீராகவும், கடுமைகாட்டுபவராகவும் நியமித்து உங்களை அனுப்பி வைக்கவில்லை. மாறாக, இமாமாக ஆக்கி உங்களை அனுப்புகின்றேன். ஏனென்றால் மக்கள் உங்களை பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும். முஸ்லிம்களின் உரிமையை வழங்க வேண்டும். அவர்களை இழிவுபடுத்தக்கூடாது. தண்டனை வழங்கக்கூடாது. மாறாக, அவர்களின் உரிமைகளை வழங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒருவர் சோதனைக்கு உள்ளாக்கப்படும் பொருட்டு எவரையும் ஆகுமற்ற முறையில் புகழக்கூடாது. அவர்களுக்காக உங்களது வாசல்களை ஒருபோதும் அடைத்து வைக்கக்கூடாது. அதிகாரம் படைத்தவர்கள் பலவீனமானவர்களை தின்று விடக்கூடாது. மற்றவர்களை விட உங்களுக்கு நீங்கள் முன்னுரிமை வழங்கக்கூடாது. இது அவர்கள் மீது செய்யப்படும் அநீதியாகும்.

அதிகாரியாக நியமிக்கப்பட்டு வந்தவரிடமிருந்து நான் துருக்கி குதிரையில் சவாரி செய்ய மாட்டேன் என்ற உறுதிமொழி பெறப்பட்டு வந்தது. மென்மையான ஆடைகளை உடுத்தக்கூடாது. அரைத்த கோதுமையை உண்ணக்கூடாது. வீட்டு வாசலில் காவலாளிகளை நிறுத்தக்கூடாது. ஏழைகளுக்காக எப்போதும் கதவை திறந்தே வைத்திருக்க வேண்டும். இவை அனைத்தும் அதிகாரிகளுக்குரிய வழிகாட்டுதல்களாக இருந்தன. மேலும் பொது மக்களுக்கும் அது வாசித்துக் காட்டப்பட்டு வந்தது. அதிகாரிகள் நியமிக்கப்பட்ட பிறகு அவர்களின் செல்வங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்தன. ஒருவேளை அதிகாரியின் பொருளாதார நிலையில் அசாதாரண முன்னேற்றம் இருக்குமென்றால் மேலும் எவரைக் குறித்து திருப்தி ஏற்படவில்லையோ அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. அதிகப்படியான செல்வம் பைத்துல் மாலில் சேமிக்கப்படும்.

ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தின்போது கண்டிப்பாக ஒன்றுகூட வேண்டும் என அதிகாரிகளுக்கு கட்டளை இருந்தது. அங்கு பொது நீதிமன்றம் கூட்டப்பட்டது. அதில் ஒரு நபருக்கு ஒரு அதிகாரி பற்றி புகார் இருக்குமென்றால் அங்கு உடனடியாக அது சரி செய்யப்பட்டது. அதிகாரிகளைப் பற்றிய புகார்கள் வந்தால் அதை விசாரிப்பது தொடர்பாகவும் ஒரு பதவி உருவாக்கப்பட்டது. அதில் பெரும் சஹாபிகள் அமர்ந்தனர். அவர்கள் விசாரணைக்காக சென்று வந்தனர். ஒருவேளை புகார் உண்மையானதென்றால் பின்னர் அதிகாரிகள் பிடிக்கப்பட்டு வந்தார்கள்.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 189–193 – 1991 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

அதிகாரிகளின் புகார்கள் பற்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நடைமுறையை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சம்பவமாகும். கூஃபாவாசிகள் பெரும் கிளர்ச்சியாளர்களாக இருந்தனர். இந்த நீதிபதி இப்படி இருக்கின்றார்; இன்ன நீதிபதியிடம் இன்ன குறை உள்ளது. அவரிடம் இந்த குறை உள்ளது என்று எப்போதும் தமது அதிகாரிகளுக்கு எதிராக புகார் செய்து கொண்டிருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவர்களின் புகாரின் அடிப்படையில் அதிகாரிகளை மாற்றி வந்தார்கள். அதிகாரிகளை நியமித்து அனுப்பி வந்தார்கள். பின்னர் அந்த அதிகாரிகளை மாற்றியும் வந்தார்கள். அந்த அதிகாரிக்கு பகரமாக வேறு அதிகாரிகளை நியமனம் செய்து வந்தார்கள்.

இந்த வழிமுறை சரியானதல்ல என்று சிலர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினர். இவ்வாறு மாற்றிக் கொண்டே இருந்தால் அவர்கள் புகார் செய்து கொண்டே இருப்பார்கள் என்று கூறினர். எனவே தாங்கள் மீண்டும் மீண்டும் அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என்று கூறினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் அதிகாரிகளை மாற்றிக் கொண்டே செல்வேன். எந்த அளவுக்கென்றால் கூஃபாவாசிகள் சுயமே சோர்ந்துபோய் விட வேண்டும்.

இதேபோன்று ஒரு நீண்ட காலம் வரை அவர்களிடமிருந்து புகார்கள் வந்து கொண்டே இருந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இனி நான் கூஃபாவாசிகளுக்கு அவர்களை சரியாக்கக்கூடிய ஒரு நபரை கவர்னராக அனுப்புவேன். அந்த கவர்னர் 19 வயதுடைய ஓர் இளைஞராக இருந்தார். அவரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவர்களை (கூஃபாவாசிகளை) நேராக்குவதற்காக அனுப்பினார்கள். அந்த 19 வயதுடைய இளைஞனின் பெயர் அப்துர் ரஹ்மான் பின் லைலாவாக இருந்தது. 19 வயது கொண்ட ஒரு சிறுவன் தங்களின் கவர்னராக நியமிக்கப்பட்டு வர இருக்கின்றார் என்று கூஃபாவாசிகளுக்கு தெரிய வந்தபோது, வாருங்கள்! நாம் அனைவரும் இணைந்து அவரை ஏளனம் செய்வோம் என்று கூறினர்.

கூஃபாவாசிகள் மிகவும் தீயவர்களாகவும், கர்வம் கொண்டவர்களாகவும் இருந்தனர். அவர்கள் பெரும் பெரும் ஆடைகளை அணிந்த 70,80, 90 வயதுடைய முதியவர்களையெல்லாம் ஒன்றுகூட்டினார்கள். மேலும் இந்த அனைத்து முதியவர்களுடனும் நகரத்தின் அனைத்து மக்களும் சேர்ந்து அப்துர் ரஹ்மானை வரவேற்பதற்காக செல்ல வேண்டும். பின்னர் கேலியாக மரியாதைக்குரியவருக்கு வயது என்ன? என்று கேட்க வேண்டும். இவ்வாறு அவரிடம் வயதை விசாரிக்க வேண்டும். அவர் பதிலளித்து விடும்போது அனைவரும் சிரித்து ஏளனம் செய்ய வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்திருந்தனர். சிறியவராக இருந்து கொண்டு எமது கவர்னராக ஆகிவிட்டார் என்று அவரை ஏளனம் செய்ய வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்திருந்தனர்.

எனவே இதே திட்டத்திற்கேற்ப அவர்கள் நகரத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் வெளியில் அவரை வரவேற்பதற்காக சென்றனர். மற்றொரு பக்கம் கழுதையின் மீது சவாரி செய்து அப்துர் ரஹ்மான் பின் அபீ லைலா அவர்களும் வந்தடைந்தார்கள். கூஃபாவாசிகள் அனைவரும் அணிவகுத்து நின்று கொண்டிருந்தனர். முதல் வரிசையில் முதியவர்களின் தலைவர்கள் இருந்தனர். அப்துர் ரஹ்மான் பின் அபீ லைலா அவர்கள் அருகில் வந்தடைந்ததும் நீங்களா எங்களுடைய கவர்னராக நியமிக்கப்பட்டு வந்துள்ளீர்கள்? உங்களின் பெயர்தான் அப்துர் ரஹ்மானா? என்றும் கேட்டனர். அன்னார் ஆம் என்று கூறினார்கள். அதற்கு அவர்களில் மிகவும் முதியவர் ஒருவர் முன்னால் வந்தார். ஜனாப் உங்களின் வயது என்ன? என்று கேட்டார்.

அதற்கு எனது வயதா? என்னுடைய வயதை நீங்கள் இவ்வாறு கணித்துக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஸாமா பின் ஸைத் அவர்களை பத்தாயிரம் சஹாபிகளுக்கு தலைவராக ஆக்கி அனுப்பினார்கள். அதில் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் பங்கெடுத்திருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் அவர்களுக்கு என்ன வயது இருந்ததோ அதிலிருந்து ஒரு வயது எனக்கு கூடுதல் ஆகும் என்று கூறினார்கள்.

இதைக் கேட்டதும் அவர்கள் வாயடைத்து விட்டனர். மேலும் வெட்கித் தலைகுனிந்து பின்னால் சென்று விட்டனர். இந்த பையன் இங்கு இருக்கும் வரை எவரும் பேசாதீர்கள். எச்சரிக்கையாக இருங்கள். இவர் தோலை உரித்து விடுவார் என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். ஆக அவர் நீண்ட காலம் வரை கவர்னராக இருந்தார். கூஃபாவாசிகள் அவருக்கு முன்னால் பேச இயலாதவர்களாக இருந்தனர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 23 பக்கம் 222–223)

பின்னர் முஹாஸில் அமைப்பு உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈராக் மற்றும் சிரியா வெற்றிகளுக்குப் பிறகு ஹராஜ் அமைப்பின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். எந்த நிலங்களை அரசர்கள் உள்ளூர்வாசிகளிடமிருந்து வலுக்கட்டாயமாக பிடுங்கி அரசவை ஊழியர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் கொடுத்திருந்தார்களோ அவை உள்ளூர்வாசிகளுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது. அத்துடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்தக் கட்டளையையும் வழங்கினார்கள். அதாவது இந்த நாட்டில் பரவியுள்ள அரபிகள் விவசாயம் செய்ய மாட்டார்கள். அதாவது அரபிகள் விவசாயம் செய்ய மாட்டார்கள். அதனுடைய நன்மை இவ்வாறாக இருந்தது. அதாவது விவசாயம் தொடர்பாக உள்ளூர்வாசிகளுக்கு அனுபவம் இருந்தது. அரபிகள் அதைப் பற்றி அறியாதவர்களாக இருந்தனர். ஒவ்வொரு பகுதியிலும் விவசாயத்திற்கென்று உள்ளூரின் நடைமுறை ஒன்று இருந்தது. எனவேதான் வெளியூரிலிருந்து வந்திருந்தவர்கள் விவசாயம் செய்ய மாட்டார்கள். மாறாக உள்ளூர்வாசிகளே விவசாயம் செய்வார்கள் என்ற கட்டளை வழங்கப்பட்டது.

ஹராஜ் (வரி) என்பது முன்பு மக்களிடமிருந்து வலுக்கட்டாயமாக பெறப்பட்டு வந்தது). ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வரி விதிப்பிற்கான சட்டங்களை முறைப்படுத்திய பிறகு வரியை வசூல் செய்வதற்கான வழிமுறையையும் மிகவும் இலகுவாக்கினார்கள். மேலும் புதிய திருத்தங்களையும் செய்தார்கள். ஹராஜ் வசூல் செய்யும் நேரத்தில் முறையாக விசாரித்தார்கள். எவர் மீதும் அநீதி இழைக்கப்பட்டதா? என்பதை விசாரித்தார்கள். பார்ஸியாகவும், கிருஸ்துவர்களாகவும் இருந்த பொது மக்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அவர்களின் ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டார்கள்.

(ஷூப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 198, 202, 207, 208 – 1991 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

விவசாயத்தின் முன்னேற்றத்திற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கள் வசிக்காத நிலங்கள் தொடர்பாக இவ்வாறு அறிவிப்பு செய்தார்கள். அதாவது எவர் இந்த நிலங்களில் இடம் பெயர்வாரோ அது அவருக்கு உரிமையுடையதாக ஆகிவிடும் என்று கூறினார்கள். அதற்காக மூன்று வருடங்கள் நிர்ணயிக்கப்பட்டன. நதிகள் வெட்டப்பட்டன. விவசாயத்துறை உருவாக்கப்பட்டது. அது குளங்கள் போன்றவற்றை தோண்டுவதற்கான பணிகளை மேற்கொள்ளும் துறையாக இருந்தது.

(ஷூப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 209, 210 – 1991 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

இதன் மூலம் விவசாயம் மேம்பட வேண்டும் என்பது நோக்கமாக இருந்தது. இவ்வாறு நான் சில பணிகளை மட்டுமே கணக்கிட்டுள்ளேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு இன்னும் தொடர்ந்து நடைபெறும். இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களிலும் எடுத்துரைப்பேன்.

நான் ஓர் அறிவிப்பையும் செய்ய விரும்புகின்றேன். அது என்னவென்றால், ஒரு அஹ்மதிய்யா encyclopedia ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதனை இன்று நான் தொடங்கி வைப்பேன். அதனை தலைமையக அஹ்மதிய்யா ஆர்காயிஸ் மற்றும் ஆய்வுத்துறை உருவாக்கியுள்ளது. சில காலம் முன்பு தான் அவர்கள் இந்தப் பணியை தொடங்கி இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் தற்போது இந்த இணையதளம் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு Online–ல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

www.ahmadipedia.org என்ற முகவரியில் அதனைப் பார்க்கலாம். அதில் Search Engine வழிமுறையில் Home Page–ல் கட்டுரைகளை தேடுவதற்காக திறக்கப்பட்டுள்ளது. அதனை மிக எளிய பயன்பாட்டிற்காக எளிமையாக உருவாக்கப்பட்டுள்ளது. ஜமாஅத் புத்தகங்கள், தனி நபர்கள், சம்பவங்கள், கொள்கைகள் மற்றும் கட்டிடங்களின் அடிப்படையில் அடிப்படை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நுழைவின்போதும் Website மற்றும் ஜமாஅத் பத்திரிகைகளிலிருந்து கட்டுரைகளின் Link–ம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விரிவான விவரங்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விளக்கங்களுக்காகவே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த Liks களில் இவ்வாறு ஒரு பயனும் உள்ளது. அது என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஏனைய website கள் வரையும் பார்வையாளர்கள் சென்றடைய முடியும். மேலும் அவர்கள் அனைத்து பத்திரிகைகள் மற்றும் செய்தித்தாள்களிலிருந்து பயன் பெற முடியும். உலகம் முழுவதும் பரவியுள்ள ஜமாஅத் உறுப்பினர்களிடம் ஏராளமான பயனுள்ள தகவல்கள் உள்ளன. அவை எங்கும் Record ஆக இல்லை.

ahmadipedia என்ற Website ல் contribute என்ற ஒரு அம்சமும் உள்ளது. அதில் எந்தவொரு தலைப்பை பற்றியும் தனது தகவல்கள் அல்லது சாட்சியங்கள் அல்லது ஆதாரங்களை வழங்க முடியும். அவர்களே நேரடியாக அதில் பதிவேற்றம் செய்யக்கூடாது. மாறாக, அவர்கள் அதனை அதனுடைய அமைப்பிற்கு தகவல் கொடுக்க வேண்டும். அவர்கள் கொடுத்த அந்த விவரங்கள் ஆராய்ந்து உறுதிப்படுத்தப்பட்ட பிறகு சம்பந்தப்பட்ட தலைப்புகள் entry–ல் சேர்க்கப்பட்டு விடும். இவ்வாறு இந்த Website முழு ஜமாஅத்தின் ஒத்துழைப்புடன் நடக்கக்கூடிய Project ஆகி விடும். இன்ஷா அல்லாஹ். ஒவ்வொரு அஹ்மதிக்கும் பயனுள்ளதாக இருக்கும். ஒருவேளை எந்தவொரு அஹ்மதிக்கும் Website–ல் தேவைப்படும் விவரம் கிடைக்கவில்லை என்றால் அவர் ahmadipedia வில் தொடர்பு கொள்ளலாம். பின்னர் இந்த மக்கள் Website ல் தேவைப்படும் கட்டுரையை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

அவர்கள் தொடர்ந்து கூறுகின்றனர்: இந்த அனைத்து தகவல்களும் ஆதாரப்பூர்வமான வழிமுறையின் மூலமாகவே கொடுக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் அங்கு கொடுக்கப்பட்டுள்ள விவரங்களுக்கு நேர் எதிராக பார்வையாளர்களிடம் ஆதாரம் இருக்குமென்றால் அந்த விவரங்களை எங்களுக்கு அனுப்பி வைக்கவும். ஆய்விற்குப் பிறகு ஜமாஅத்தின் வரலாற்றை ஆதாரப்பூர்வமான முறையில் பாதுகாப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும்.

இந்த Website–ன் தயாரிப்பிற்காக அனைத்து தொழில்நுட்ப பணிகளையும் தலைமையக IT துறை மிக அழகிய முறையில் மேற்கொண்டுள்ளது. IT துறை இதற்காக கடுமையாக உழைத்துள்ளது. அதில் அவர்களின் நிரந்தரமான ஊழியர்கள் மட்டுமின்றி தன்னார்வத் தொண்டர்களும் அடங்குவர். கட்டுரைகளின் தயாரிப்பிற்காக தலைமைய IT துறையின் முரப்பிமார்களும், தன்னார்வத் தொண்டர்களும் மிகவும் உழைத்துள்ளனர். இந்த Webiste ற்காக அவர்கள் அனைவரும் உழைத்துள்ளனர். மேலும் அதில் பணி செய்யக்கூடியவர்கள் கட்டுரைகளை பெறுவதற்காகவும், உருதுவிலிருந்து மொழியாக்கம் செய்கின்ற பணியிலும், கட்டுரைகளை பதிவேற்றம் செய்கின்ற பணியிலும் சுருக்கமாக அனைத்து பணிகளிலும் அவர்கள் மிகக் கடுமையாக உழைத்துள்ளனர்.

அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக. இன்று நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் அதனை துவங்கி வைப்பேன்.

(தமிழில்: மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

☆ ☆ ☆

**ஸகாத் கொடுப்பதற்கான பைஅத்**

ஹஸ்ரத் ஜரீர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், தொழுகையை அழகுபடுத்தி தொழுது வருவேன், ஸகாத் கொடுத்து வருவேன், அனைத்து முஸ்லிம்களுக்கும் நன்மையை விரும்புவேன் என்று நான் பைஅத் செய்தேன்.

(ஸஹீஹ் புகாரி தொகுதி 3 ஹதீஸ் எண் 1401)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 05 Aug 2021 Issue No. 31

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(மல்ஃபூஸாத்... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

**இறைநேசர்களை நிராகரிப்பது ஈமானை வீணாக்குவதற்கு காரணியாக அமைகின்றது**

அவர்களின் மூளையின் ஆற்றல் மற்றும் ஈமானிய ஆற்றல் அவர்களை எந்த இடத்திற்கு கொண்டு சேர்த்துவிட்டதென்றால் நபியை நிராகரிப்பவர் காஃபிர் ஆவார் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் வலியை (இறைநேசரை) நிராகரிப்பதால் குஃப்ர் எவ்வாறு கட்டாயமாகின்றது? என்று கேட்கின்றனர். ஒரு நபரை நிராகரிப்பதால் என்னவாகி விடப்போகிறது? என்று கருதுகின்றனர். இறைநேசர்களை நிராகரிப்பதை இந்த மக்கள் சாதாரண விஷயமாக கருதுகின்றனர். மேலும் இதனால் என்ன சீர்கெட்டு விடும்? என்று கூறுகின்றனர். ஆனால் உண்மை என்னவென்றால், இறைநேசர்களை நிராகரிப்பது ஈமானை வீணாக்குவதற்கு காரணியாக அமைகின்றது. இந்த விஷயத்தை சீர்தூக்கிப் பார்த்தவருக்கு இது நன்றாகத் தென்படும். இன்னும் கூறப்போனால், கண்ணாடியில் ஒருவருக்கு முகம் தெரிவது போன்று இந்த விஷயம் அவருக்கு தென்பட்டு விடும்.

நினைவிற் கொள்ள வேண்டும். இரண்டு வகைகளில் ஈமான் பறிபோகின்றது. ஒன்று, நபிமார்களை நிராகரிப்பதால் அதனை எவரும் மறுக்க மாட்டார். இது எல்லாரும் ஏற்றுக் கொண்ட விஷயம் தான். இரண்டாவது இறை நேசர்கள் மற்றும் இறைவனால் அனுப்பப்பட்டவர்களை நிராகரிப்பதால் ஈமான் வீணாகி விடுகின்றது. நபிமார்களை நிரகாரிப்பதால் ஈமான் பறிபோவது என்பது முற்றிலும் தெளிவான காரியமாகும். அதனை அனைவரும் அறிவர். இருந்தபோதிலும் நினைவிற் கொள்ள வேண்டும். நபிமார்களை நிராகரிப்பதால் ஈமான் ஏன் பறிபோகின்றது? என்றால் நாங்கள் இறைவன் புறமிருந்து வந்துள்ளோம் என்று நபிமார்கள் கூறுகின்றனர்.

இவர் கூறுகின்ற வார்த்தைகள் என்னுடைய வார்த்தைகளாகும். இவர் எனது நபி ஆவார். இவர் மீது ஈமான் கொள்ளுங்கள். எனது வேதத்தை ஒப்புக் கொள்ளுங்கள். எனது கட்டளைகளின்படி செயல்படுங்கள் என்று இறைவன் கூறுகின்றான். எவர் அல்லாஹ்வின் வேதத்தின் மீது நம்பிக்கை கொள்வதில்லையோ மேலும் அல்லாஹ் கூறியுள்ள அறிவுரைகளின்படியும், அதில் இறைவன் எடுத்துரைத்த கட்டளைகளின்படியும் அமல் செய்வதில்லையோ அத்தகையவர் அதனை நிராகரித்து காஃபிராகி விடுகின்றார். இதனால் இறை நேசர்களை நிராகரித்து ஈமான் பறிபோகின்ற நிலை என்பது வேறொன்றாகும். ஒரு நபிமொழியில் வந்துள்ளது. அதில் அல்லாஹ் مَنْ عَادَىٰ لِيْ وَلِيًّا فَاٰذَنْتُهٗ لِلْحَرْبِ என்று கூறுகின்றான். அதாவது எந்த நபர் எனது நண்பருடன் பகைமை கொள்கின்றாரோ அவர் ஒருவகையில் என்னுடன் போர் செய்வதற்கு தயாராகின்றார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 313 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

*(தஃப்ஸீரே கபீர்... முதல் பக்கத்தின் தொடர்சி...)*

என்பது அவர்களுக்கு தெரிந்திருந்தால் அவர்களின் சீர்திருத்தம் ஏற்பட்டு விடும். எனவே பிள்ளைகள் மீதான அன்பை விட இறைவனின் மீதான அன்பு மேலோங்கி இருக்க வேண்டும். وَمَنْ عَصَانِيْ فَاِنَّكَ غَفُوْرٌ رَّحِيْمٌ பற்றி ஏற்கனவே கூறப்பட்டிருந்தது. எனது பிள்ளைகளில் ஒருவர் ஷிர்க் செய்து விடுவார் என்றால் அவர் எனது சந்ததியைச் சார்ந்தவராக இருக்க மாட்டார். எனினும் நபியிடத்தில் கருணையும் இருக்கும். பிள்ளையை பிள்ளை என்று கருதாததும், இறைநேசத்திற்கு முன்னுரிமை வழங்குவதும் வேறு வேறு விஷயமாகும். அவர்களுக்காக இறைவனிடம் கருணைக்கான விண்ணப்பம் செய்வதும் வேறொரு விஷயாகும்.

எனவே ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இவ்வாறு துஆ செய்கின்றார்கள். அதாவது முதலில் எனது பிள்ளைகள் ஷிர்க்கிலிருந்து விலகி இருக்க வேண்டும். ஆயினும் ஒருவேளை அவர்களில் எவராவது எனது நடைமுறைக்கு மாற்றம் செய்தால் பின்னர் நான் அவர்களைக் குறித்து இவ்வாறே கூறுவேன்: அதாவது அவர்கள் எனது பிள்ளைகள் அல்ல. ஆயினும் நீ மீண்டும் மீண்டும் மன்னிப்பவனாகவும், கருணை காட்டுபவனாகவும் இருக்கின்றாய். எனவே உனது கஃபூருர் ரஹீம் என்ற பண்பைக் கொண்டு நீ அவர்களின் பாவங்களை மன்னிக்க வேண்டும் என்று நான் உன்னிடத்தில் நம்பிக்கை வைக்கின்றேன். மேலும் நீ அவர்களின் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளை செய்து வர வேண்டும்.

இதில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது. பிள்ளைகள் மீது வெறுப்பு என்பதன் பொருள் உள்ளத்திலும் அவர்கள் மீது கடுமை காட்ட வேண்டும் என்பதல்ல. மாறாக, வெளிப்படையில் தண்டனை கொடுக்க வேண்டும். (ஆனால்) உள்ளத்தில் அவர்களுக்காக துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். அவர்களின் சீர்திருத்தத்தை கருத்தில் கொள்ள வேண்டுமே தவிர அவர்களின் அழிவை விரும்பக்கூடாது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 3 பக்கம் 484 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**நபிமொழி**

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (மறுமையில்) ஒட்டகம் தனது எஜமானரிடம் முன்னர் இருந்தது போன்று நல்ல நிலையில் வரும். அதற்கான கடமையை அவர் நிறைவேற்றாமல் இருந்திருந்தால் அது தன்னுடைய கால்களால் அவனை மிதிக்கும். மேலும் அதுபோன்றே முன்பு இருந்ததைப் போன்று நல்ல நிலையில் ஆடுகளும் தனது எஜமானரிடம் வரும். அவர் அதற்கான கடமையை நிறைவேற்றி இருந்திருந்தால் அவை (மறுமையில்) தன்னுடைய கால்களால் அவனை மிதித்து தன்னுடைய கொம்புகளால் அவனை முட்டும். மேலும் உங்களில் யாரும் கியாமத் நாளில் கத்திக் கொண்டிருக்கும் ஆட்டைத் தம் பிடரியில் சுமந்து வந்து (அபயம் தேடிய வண்ணம்) 'முஹம்மதே' எனக் கூற, என்னால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது என்று கூறும்படியான நிலை ஏற்பட வேண்டாம்.

நிச்சயமாக உங்களுக்கு நான் (உண்மையான தூதுச் செய்தியை) அறிவித்து விட்டேன். மேலும் யாரும் (கியாமத் நாளில்) குரலெழுப்பிக் கொண்டிருக்கும் ஒட்டகத்தைத் தம் பிடரியில் சுமந்து வந்து 'முஹம்மதே' எனக் கூற, அதற்கு என்னால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது என்று சொல்லும் படியான நிலைமை ஏற்பட வேண்டாம். நான் (உண்மையான தூதுச் செய்தியை) முழுமையாக அறிவித்து விட்டேன்.

(தொகுதி 3 ஹதீஸ் எண் 1402 – 2008 ஆம் ஆண்டு காதியான் வெளியீடு)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad